687

Tamil Nadu Legislative Assembly Debates

17th March 1990

V. 21 No. 1

வெளியீடு 18–7–1990 Issued 18-7-1990

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

சனிக்கிழமை ,மார்ச் 17, 1990 - தொகுதி 21 - எண் 1
Saturday, the 17th March, 1990-Volume 21-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-0

143792

D

V211,31'N90

N90.21.1

உள்ளடக்கம்.

17–3–1990

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—iii |
| Personnel of the Government of Tamil Nadu. | v—viii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | xi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி). | xii—xx |
| 1. வரவு–செலவுத் திட்டம், 1990–91, அளித்தல். | 1—6,7—45 |
| 2. தகவல் கோரல்: | |
| உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒரு கட்சித் தொண்டர் சிறையிலிருப்பதாகக் கூறப்படுவது குறித்து. | 6—7 |
| 3. முன்பண மானியக் கோரிக்கைகள், 1990–91—அளித்தல். | 46—48 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 49—52 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாண்டர்

687

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிகவரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை.

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட) ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் ராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறை முகங்கள் மற்றும் வீட்டு

6. அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி, அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்: வனங்கள் மற்றும் சின்கோனா.

7. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கோ. சி. மணி: நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம்: உணவு, விலைவாசி, கட்டுப்பாடு மற்றும் நுகர்பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள்.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீராண்டி சோ. ஆறுமுகம்: வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.

10. பொதுப்பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள், மற்றும் மின்சாரம்.

11. சமூகநலம்—ஊரகத் தொழில்துறை அமைச்சர். .. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: சமூகநலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம குடிசை, சிறு தொழில்கள் உட்பட), கதர் வாரியம், பூமி தானம் மற்றும் கிராமதானம்.

12. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.



13. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

14. செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. என். நேரு: செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், திரைப் படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகை கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் இரும்பு எஃகுக்கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், மற்றும் பால்வளம்.

15. கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம்.

16. கைத்தறி—நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க. தங்கவேலு: கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம்.

முதலமைச்சரின் பேரவைச் செயலர் .. திரு. எல். கணேசன்

# Personnel of the Government of Tamil Nadu

Governor of Tamil Nadu: Thiru P.C. Alexander.

Members of the Council of Ministers.

| | | |
|---|---|---|
| 1. | Chief Minister .. | The Hon. Dr. M. KARUNANIDHI: Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor, Permits and Excise. |
| 2. | Minister for Education .. | The Hon. Dr. K. ANBAZHAGAN: Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Service-men and Archaeology. |
| 3. | Minister for Law .. | The Hon. Thiru S. J. SADIQPASHA: Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money-lending and Legislation on Chits and Wakf. |
| 4. | Minister for Revenue .. | The Hon. Thiru NANJIL K. MANOHARAN: Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. | Minister for Transport .. | The Hon. Thiru M. KANNAPPAN; Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |
| 6. | Minister for Hindu Religious and Charitable Endowments .. | The Hon. Thiru K.P. KANDASAMY: Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |
| 7. | Minister for Rural Development and Local Administration .. | The Hon. Thiru Ko. Si. MANI: Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness. |

| | | |
|---|---|---|
| 8. Minister for Food and Co-operation | .. | The Hon. Thiru Pon. MUTHURAMA-LINGAM: Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 9. Minister for Agriculture | .. | The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM: Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production. |
| 10. Minister for Public Works | .. | The Hon. Thiru DURAIMURUGAN: Public Works, Minor Irrigation, including special minor irrigation Programme Works, Highways, and Electricity. |
| 11. Minister for Social Welfare and Rural Industries | .. | The Hon. Tmt. SUBBULAKSHMI JAGADISAN: Social Welfare including Children and Women's Welfare, Beggars Home, Orphanages, Correctional Administration, Nutritions Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan. |
| 12. Minister for Adi-Dravidar Welfare | .. | The Hon. Dr. E. RAMAKRISHNAN: Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 13. Minister for Public Health | .. | The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI: Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control. |



| | | |
|---|---|---|
| 14. **Minister for Information and Labour** | .. | The Hon. Thiru K. N. NEHRU: *Information and Publicity,* Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint control, Stationery and Printing, Government Press, and Milk. |
| 15. Minister for Animal Husbandry | .. | The Hon. Dr. K. CHANDRA-SEKARAN: Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 16. Minister for Hand looms and Urban Development | .. | The Hon. Thiru S. THANGAVELU: Handlooms, Textiles, Town Planning, Urban Development Accomodation Control, and Slum Clearance Board. |
| Parliamentary Secretary to Chief Minister. | | Thiru L. GANESAN. |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்

திரு. வீ. பெ. துரைசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
திரு. பெ. சு. திருவேங்கடம்.
திரு. இரா. மோகன்.
திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.
திரு. குமரி அனந்தன்.
திரு. உ. ரா. வரதராசன்.

திரு. இ. கு. இராமசாமி,
செயலாளர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்
(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| சீதாராமன், திரு. வெ. பி.காம்., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த.ப., பி.எஸ்ஸி., பி.எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ. பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| இராமச்சந்திரன், திரு. ஆர்.கே., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| சுவாமிநாதன், திரு. ச. எம்.ஏ., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ.சு., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| கோவிந்தராஜன், திரு. ஆர். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு. சு. பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா.செ., பி.ஏ., பிஜி.எல். | சார்புச் செயலாளர் |
| முனீர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி. | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ. | சார்புச் செயலானர் |
| ஜான் திரு. வ.சா. பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு. மா.கு., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| அரங்கநாதன், திரு. ச., பி.ஏ., பி.எல். | தலைமை நிருபர் (குழுக்கள்) |
| ஜெயதேவ், திரு. பி. சி. | தலைமை நிருபர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **'அ'** | |
| 1. அங்கமுத்து, திரு.கே. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 2. ஆ[illegible]கன், திரு.ஜெ. | இராணிப்பேட்டை |
| 3. அண்ணாதுரை, திரு.கா. | பட்டுக்கோட்டை |
| 4. அண்ணாதுரை, டாக்டர் கே. | வரகூர் (செ.வ.) |
| 5. அண்ணாநம்பி, திரு.ஆர். | அவிநாசி (செ.வ.) |
| 6. அண்ணாமலை, திரு.எம். | அரூர் (செ.வ.) |
| 7. அதியமான், திரு.ஆ. | சேடப்பட்டி |
| 8. அப்துல்சமத், திரு.பா. | வாணியம்பாடி |
| 9. அப்துல் லத்தீப், திரு.எம். | சேப்பாக்கம் |
| 10. அர்ஜுனன், திரு.கே. | தாரமங்கலம் |
| 11. அழகர்சாமி, திரு.சோ. | கோவில்பட்டி |
| 12. அழகுவேலு, திரு.ச. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அறிவழகன், திரு.ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ. |
| 14. அன்பழகன், டாக்டர் க. | அண்ணாநகர் |
| 15. அன்பழகன், திரு. வ. | செய்யாறு |
| 16. அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி–2 |
| **'ஆ'** | |
| 17. ஆசையன், திரு.பெ. | ஆண்டிப்பட்டி |
| 18. ஆண்டி அம்பலம், திரு.மெ. | நத்தம் |
| 19. ஆறுமுகம், திரு.த. | அரியலூர் |
| 20. ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | சேலம்-2 |
| **'இ'** | |
| 21. இர்குமான்கான், திரு.அ. | பூங்கா நகர் |
| 22. இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 23. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | மேலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **'இ' தொடர்ச்சி.** | |
| 24. இராசன், திரு.வி.பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25. இராசு, திரு.வி.கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 26. இராசு, திரு.வெ. | குளத்தூர் (செ.வ.) |
| 27. இராசேந்திரன், திரு.அ. | போளூர் |
| 28. இராதா, திரு.எஸ். ஆர். | மதுரை கிழக்கு |
| 29. இராதாகிருஷ்ணன், திரு.டி. | சோழவந்தான் |
| 30. இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31. இராமகிருஷ்ணன், திரு.நா. | கம்பம் |
| 32. இராமச்சந்திரன், திரு.எம். | திருவோணம் |
| 33. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | விளாத்திகுளம் |
| 34. இராமச்சந்திரன், திரு.ந. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு.ஏ.எம். | ஆத்தூர் |
| 36. இராமசாமி, திரு.கே.வி. | கரூர் |
| 37. இராமசாமி, திரு.வி. | திருச்செங்கோடு |
| 38. இராமசாமி, திரு.கே.ஆர். | திருவாடானை |
| 39. இராமநாதன், திரு.மு. | கோவை மேற்கு |
| 40. இராமலிங்கம், திரு.செ. | திருவிடைமருதூர் |
| 41. இராஜேந்திரன், திரு.கே.ஆர். | பர்கூர் |
| 42. இராஜேந்திரன், திரு.பி.வி. | வேதாரண்யம் |
| 43. இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| **'ஈ'** | |
| 44. ஈஸ்வரன், திரு.ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| **'உ'** | |
| 45. உகம்சந்த், திரு.எஸ்.டி. | மதுராந்தகம் |
| 46. உதயசூரியன், திரு.தா. | சின்னசேலம் |
| 47. உபயதுல்லா, திரு.எஸ். என்.எம். | தஞ்சாவூர் |
| **'ஏ'** | |
| 48. ஏகாம்பர ரெட்டி, திரு.எ. | பள்ளிபட்டு |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'க' | |
| 49. கண்ணப்பன், திரு.மு. | பல்லடம் |
| 50. கண்ணன், திரு.எஸ்.பி. | அணைக்கட்டு |
| 51. கணபதி, திரு.என். | மயிலாப்பூர் |
| 52. கணேசமூர்த்தி, திரு.என். | குறிஞ்சிப்பாடி |
| 53. கணேசமூர்த்தி, திரு.ஏ. | மொடக்குறிச்சி |
| 54. கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு |
| 55. கணேசன், திரு. க. சொ. | ஜெயங்கொண்டம் |
| 56. கணேசன், திரு. சா. | தியாகராயநகர் |
| 57. கணேசன், திரு. வே. | மங்களூர் (செ.வ.) |
| 58. கந்தசாமி, திரு. கே. | கிணத்துக்கடவு |
| 59. கந்தசாமி, திரு. கே. பி. | திருச்செந்தூர் |
| 60. கரீம், திரு. எம். கே. | கூடலூர் |
| 61. கருணாநிதி. டாக்டர் மு. | துறைமுகம் |
| 62. கருப்பசாமி, திரு. எஸ். எஸ். | சாத்தூர் |
| 63. கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபனாசம் |
| 64. கன்னையன், திரு. க. | தொட்டியம் |
| 65. கஜபதி, திரு. டி. ஆர். | ஆற்காடு |
| 66. காஞ்சனா, டாக்டர் க. | கிருஷ்ணகிரி |
| 67. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர் |
| 68. காளியப்பன், திரு. பி. | ஒட்டன்சத்திரம் |
| 69. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம் |
| 70. கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 71. குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ.வ.) |
| 72. குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 73. குருநாதன், திரு. சு. | பாளையங்கோட்டை |
| 74. குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. | பவானி |
| 75. கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 76. கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 77. கோவிந்தசாமி, திரு. சி. | திருப்பூர் |
| 78. கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'க'—தொடர்ச்சி. | |
| 79. கோவிந்தராஜன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 80. கோவிந்தன், திரு. வெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 'ச' | |
| 81. சண்முகம், திரு. சி. | ஆலந்தூர் |
| 82. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி |
| 83. சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி |
| 84. சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |
| 85. சம்பத், திரு. ஏ. ஜி. | முகையூர் |
| 86. சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 87. சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை |
| 88. சாந்தகுமாரி, டாக்டர் த. | தாராபுரம் (செ.வ.) |
| 89. சாமிநாதன், திரு. ஆர். | திருமங்கலம் |
| 90. சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 91. சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம் |
| 92. சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி |
| 93. சின்னக்குழந்தை, திரு. மு. | பெரணமல்லூர் |
| 94. சிவலோகம், திரு. எஸ். | புவனகிரி |
| 95. சின்னசாமி. திரு. கே. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 96. சின்னசாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 97. சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர் |
| 98. சீரங்கன், திரு. எம். | மேட்டூர் |
| 99. சீனிவாசன், திரு. பெ. | சிவகாசி |
| 100. சுந்தர், திரு. கே. | உத்திரமேரூர் |
| 101. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 102. சுந்தரம், திரு. க. | பொன்னேரி (செ. வ.) |
| 103. சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 104. சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 105. சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ) |
| 106. சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | 'ச'—தொடர்ச்சி. | |
| 107. | சுப்பிரமணியம், திரு. தா. க. | சத்தியமங்கலம் |
| 108. | சுப்பிரமணியன், திரு. அ. லெ. | திருநெல்வேலி |
| 109. | சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை |
| 110. | சுப்பு, திரு. ஏ. | ராசிபுரம் |
| 111. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு |
| 112. | சுப்பையா, திரு. ஆலவயல் | திருமயம் |
| 113. | செங்குட்டுவன், திரு. ஏ. | மயிலாடுதுறை |
| 114. | செங்கைசிவம், திரு. | பெரம்பூர் (செ.வ.) |
| 115. | செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டி பாளையம் |
| 116. | சேட்டு, திரு. எம். | செங்கம் (செ. வ.) |
| 117. | சொக்கர், திரு. ரா. | விருதுநகர் |
| 118. | சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.) |
| | 'ட' | |
| 119. | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| | 'த' | |
| 120. | தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை |
| 121. | தங்கம், திரு. அ. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 122. | தங்கராஜன், திரு. எஸ். ஏ. | திண்டுக்கல் |
| 123. | தங்கராஜு, திரு. ஏ. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 124. | தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 125. | தங்கவேல், திரு. என். | குன்னூர் (செ.வ.) |
| 126. | தங்கவேலு, திரு. ச. | சங்கரநாயனார்கோவில் (செ.வ.) |
| 127. | தம்புசாமி, திரு. வி. | திருவாரூர் (செ.வ.) |
| 128. | தமிழ்க் குடிமகன் முனைவர் மு. | இளையான்குடி |
| 129. | தமிழ்மணி, திரு. வீ. | செங்கல்பட்டு |
| 130. | தயாளன், திரு. ஏ. சி. | ஆரணி |
| 131. | தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்—1 |
| 132. | தனராஜ், திரு. வி. | வந்தவாசி (செ.வ.) |
| 133. | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 134. | திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.) |
| 135. | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | 'த'—தொடர்ச்சி | |
| 136. | துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு |
| 137. | துரைசாமி, திரு. வீ. பெ. | நாமக்கல் (செ.வ.) |
| 138. | துரைபாண்டி, திரு. பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 139. | துரைமுருகன், திரு. | காட்பாடி |
| 140. | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 141. | தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர் |
| 142. | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| | 'ந' | |
| 143. | நஞ்சப்பன், திரு. ந. | பெண்ணாகரம் |
| 144. | நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 145. | நடராசன், திரு. பொ. | திருத்தணி |
| 146. | நடேசன், திரு. எகால். மு. | ரிஷிவந்தியம் |
| 147. | நடேசன், திரு. ஆர். | திருவட்டாறு |
| 148. | நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி |
| 149. | நாராயணன், திரு. ராம. | காரைக்குடி |
| 150. | நூர்முகமது, திரு. செ. | பத்மநாபபுரம் |
| 151. | நேரு, திரு. கே. என். | லால்குடி |
| | 'ப' | |
| 152. | பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர் |
| 153. | பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர் |
| 154. | பழனிச்சாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155. | பழனிசுவாமி, திரு. க. | எடப்பாடி |
| 156. | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 157. | பனனீர்செல்வம், திரு. மா. | சீர்காழி (செ.வ.) |
| 158. | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 159. | பாப்பா உமாநாத், திருமதி | திருவரம்பூர் |
| 160. | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை |
| 161. | பால்ராஜ், திரு. சோ. | மதுரை—மத்திய |
| 162. | பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 163. | பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | **'ப'— தொடர்ச்சி.** |
| 164. பாலையா, திரு. ஆ. | கொளச்சல் |
| 165. பிச்சாண்டி திரு. கே. | திருவண்ணாமலை |
| 166. பிச்சைமுத்து. திரு. ரெ. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167. பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி |
| 168. புகழேந்தி, திரு. இ. | கடலூர் |
| 169. பூவராகன், திரு. கோ. | விருத்தாசலம் |
| 170. பெரியசாமி, திரு. என். | தூத்துக்குடி |
| 171. பெரியசாமி, திரு. ஐ. | ஆத்தூர் |
| 172. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 173. பெரியண்ணன், திரு. அ. | புதுக்கோட்டை |
| 174. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175. பொன்முடி, திரு. டி. | தண்டராம்பட்டு |
| 176. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம் |
| 177. பொன். மூத்துராமலிங்கம், திரு. | மதுரை மேற்கு |
| 178. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179. பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 180. பொன்னுபிள்ளை, திரு. ஜி. | தேனி |
| | **'ம'** |
| 181. மகேந்திரன், திரு. ஆர். | நாட்ராம்பள்ளி |
| 182. மணி, திரு. ஆச்சியூர் எம். | நாங்குநேரி |
| 183. மணி, திரு. கே. ஏ. | கபிலர்மலை |
| 184. மணி, திரு. கோ. சி. | கும்பகோணம் |
| 185. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186. மதிவாணன், திரு. இரா. | ராயபுரம் |
| 187. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 188. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி |
| 189. மனோகரன் திரு. பா. | சிவகங்கை |
| 190. மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம் |
| 191. மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 192. மாதப்பன், திரு. கொ. | பாலக்கோடு |
| 193. மாரப்பன், திரு. பி. | காங்கேயம் |
| 194. மாரிமுத்து, திரு. அ. | வானூர் (செ.வ.) |
| 195. முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார் |
| 196. முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர் |
| 197. முத்தையன், திரு. எம். | சங்கராபுரம் |
| 198. முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 199. முருகேசன், திரு. பொ. | காஞ்சிபுரம் |
| 200. முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர் |
| 201. முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர் |
| 202. முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர் |
| 203. மூக்கன், திரு. ஆர். | உப்பிலியாபுரம் (ஆ. வா.) |
| 204. மூக்கையா, திரு. எல். | பெரியகுளம் |
| 205. மோகன், திரு. இரா. | சிங்காநல்லூர் |
| 206. மோசஸ், திரு. எம். | நாகர்கோவில் |
| | **'ய'** |
| 207. யசோதா செல்லப்பா, திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| | **'ர'** |
| 208. ரமணி, திரு. கே. | கோவை (கிழக்கு) |
| 209. ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 210. ரவி அருணன், திரு. | அம்பாசமுத்திரம் |
| 211. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஒசூர் |
| 212. ராமச்சந்திரன், திரு. கே. | மன்னார்குடி |
| 213. ராமச்சந்திரன், திரு. சி. | திருப்பரங்குன்றம் |
| 214. ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப. | அரவக்குறிச்சி |
| 215. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |
| 216. ராஜு. திரு. எச். எம். | உதகமண்டலம் |
| 217. ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம் |
| | **'ல'** |
| 218. லட்சுமி, திருமதி பி. | வால்பாறை (செ.வ) |
| | **'வ'** |
| 219. வரதராஜன், திரு. ஆர். | சங்கரி (செ.வ.) |
| 220. வரதராசன், திரு. உ. ரா. | வில்லிவாக்கம் |
| 221. வல்லரசு, திரு. பி. என். | உசிலம்பட்டி |

திரு. குமரி அனந்தன் : * * *

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களே, இன்று இந்த அவையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசியக் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், பொறுப்புள்ள தலைவர்கள் மற்றும் திருவாளர்கள் ந. நஞ்சப்பன், கே. ஏ. மணி பேசிய பேச்சுகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இப்போது நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தொல்லைகள் தீர வேண்டின்
சுதந்திரம் வேண்டும்; மக்கள்
எல்லோரும் ஒன்றே என்னும்
எண்ணமிங் கோங்க வேண்டும்.
பல்லரும் தொழில்கள் செய்தும்
பசியினால் வாடும் மக்கள்
அல்லாது தெய்வம் இல்லை
என்பதை அறிய வேண்டும்.
கல்வியில் பெருக்கம் வேண்டும்.
கலைகளில் புதுமை வேண்டும்.
சொல்லிலே உண்மை வேண்டும்.
சோர்விலா உள்ளம் வேண்டும்.
கல்லினுள் தேரை போல
உலகினை எட்டிக் காணாப்
புல்லிய நிலையை ஞானத்
தீயினாற் புகைத்தல் வேண்டும்.''

எனத் தேன் தமிழ்க் கவிதையில் மனித நேய மருந்தினைக் கலந்து தந்த தென்னாட்டு காந்தி அறிஞர் அண்ணா அவர்கள் நீடு துயில் கொண்டுள்ள திக்கு நோக்கித் தொழுது, மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஒப்புதலுக்காக, 1989-90ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1990-91ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின்முன் வைக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2. தமிழ்நாட்டின் இன்றைய சமுதாயப் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்யவும், பல நடவடிக்கைகளையும் சட்டங்களையும் திட்டங்களையும் அயராது ஆர்வமுடன் வகுத்து, இடர்பல கடந்து புயல் நடுவே அகல் விளக்கினை அணையாது காப்பது போல, இந்த ஆட்சியின் மாட்சியைக் காத்திடுவதில் கண்ணும் கருத்துமாகக் கடமையாற்றுகிறோம்.

3. கடந்த ஓராண்டு காலத்தில் இந்தியத் திருநாட்டின் அரசியல் வரலாற்றில் மகத்தான திருப்பங்கள் உருவாகியுள்ளன. நாடாளுமன்றத் தேர்தல்—அதைத் தொடர்ந்து பல மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தல்—அதன் விளைவாக மத்தியிலும் பெரும்பாலான மாநிலங்களிலும் பல ஆண்டுகளாக ஒரே கட்சி ஆட்சியிலிருந்த நிலை மாறி பல கட்சிகள் தனியாகவும் கூட்டணியாகவும் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளன.

4. இந்தச் சூழ்நிலையில், பல்வேறு இனம், மொழி, கலை, கலாச்சாரம் கொண்ட இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றவும், நாடு வலிமை பெறவும், நலிவு நீங்கிய நல்வாழ்வு பொதுவில் அனைவர்க்கும் அமைந்திடவும், மாநில சுயாட்சியுடன் கூடிய முழுமையான கூட்டாட்சி முறைதான் சரியான தீர்வாக இருக்க முடியும் என்ற நமது கொள்கை, 1974 ஆம் ஆண்டு இதே மாமன்றத்தில் இதே அரசின் தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேறியுள்ளதை நினைவுகூர்ந்து, அந்தக் கொள்கைக்கு இன்று நாடு முழுவதும் நல்லாதரவு பெருகியுள்ளது என்பதைப் பார்க்கும் போது இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது.

5.. மத்தியில் மலர்ந்துள்ள தேசிய முன்னணி அரசும் முழுமையான கூட்டாட்சிக்குத் தனது ஆதரவை உறுதிப் படுத்துவதற்கு அடையாளமாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 263 ஆம் பிரிவின்கீழ் மாநிலங்களுக்கிடையேயான குழு ஒன்றை அமைக்க முடிவெடுத்துள்ளது. அந்தக் குழு போதுமான அதிகாரங்களுடன் விரைவில் செயல்படத் தொடங்கி, அதன் மூலமும் முழுமையான கூட்டாட்சித் தத்துவம் முகிழ்த்திட வழி காணப்படும் என்று நம்புகிறோம்.

6. அண்மையில் நாடாளுமன்றத்தில் முந்தைய மத்திய அரசினால் அமைக்கப்பட்ட 9—வது நிதிக் குழுவின் அறிக்கையும் அதன்மேல் மத்திய அரசு எடுத்துள்ள முடிவுகளும் வைக்கப்பட்டுள்ளன. 9-வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் நமக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளன. குறிப்பாக, மத்திய அரசின் ஆயத் தீர்வைகளில் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கு 45 சதவீத அளவிலேயே தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இதில் தமிழ்நாடு உள்ளிட்ட எல்லா மாநிலங்களுக்கும் கிடைக்கக் கூடிய பங்கு 40 சதவீதத்திலிருந்து 37.575 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, எஞ்சிய 7.425 சதவீதம் பற்றாக்குறை ஏற்படும் ஒருசில மாநிலங்களுக்கே கொடுக்கப்பட இருக்கிறது. மேலும், திட்டச்செலவுகளுக்காக

மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் மானியங்களின் பெரும் பகுதி, ஒருசில மாநிலங்களுக்கு பெரும் பயனை அளிக்கக்கூடிய வகையில், பல ஆண்டுகளாக திட்டக்குழு கடைப்பிடித்து வரும் காட்கில் வழிமுறைகளுக்குப் (Gadgil's formula) புறம்பாக, நிதிக் குழுவே பகிர்ந்தளிக்க முற்பட்டுள்ளது.

7. ஒன்பதாவது நிதிக்குழுவின் அறிக்கை வெளியிடப்படும் முன்னரே, நான் இந்த அறிக்கை மத்திய மாநில நிதி உறவு களைப் பெருமளவில பாதிக்கும் என்றும், அந்தப் பரிந்துரை களை மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்றும் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். அந்தக் கடிதத்தில் மத்திய அரசின் ஆயத்தீர்வைகளில் மொத்தமாக மாநிலங்களுக்குக் கொடுக்கப் படும் பங்கை 45 சதவீதம் என்பதிலிருந்து 50 சதவீதமாக உயர்த்தி, அதில் எல்லா மாநிலங்களுக்கும் 42.5 சதவீதமாகவும் எஞ்சிய 7.5 சதவீதத்தை பற்றாக்குறை மாநிலங்களுக்கும் கொடுக்கலாம் என்ற கருத்தை எடுத்து வைத்துள்ளேன். 9வது நிதிக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பிறகும் இந்தப் பரிந் துரையை மீண்டும் வலியுறுத்திப் பிரதமருக்கும் மத்திய நிதி யமைச்சருக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

## நிதி நிலைமை

8. தொடர்ந்து பலமுறை வலியுறுத்திக் கேட்டும்கூட, 1989–90-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இருந்த ரூ. 91.36 கோடி பற்றாக்குறைப் பள்ளத்தை நிரப்புவதற்கு நடப்பு நிதி ஆண்டில் மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி உதவி எதுவும் கிட்ட வில்லை. எனினும், நாம் சோர்ந்திடாமல் எடுத்த நடவடிக்கை கள், நிதி வாயில்களை ஓரளவு பெருக்கி, புதிய நலத் திட்டங் கள் பூத்துக் குலுங்கிடவும்—அலுவலர்களின் நலன்கள் அக்கறை யுடன் கவனிக்கப்படவும்—ஆண்டுக்கான திட்டச் செலவு உயர்ந்து நிற்கவுமான கூடுதல் பொறுப்பைச் சமாளிக்கத் துணை நின்றன.

9. தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு நல் வாழ்வுத் திட்டங்களை ரூபாய் 133.40 கோடி செலவில் நடப்பு ஆண்டில் நிறைவேற்றியுள்ளோம். நடப்பு ஆண்டின் திட்டச் செலவு ரூ. 1377 கோடி என்பது, 1988–89ஆம் ஆண்டின் திட்டச் செலவைவிட ரூ. 81 கோடி அதிகமாகும். மாநில அரசு அலுவலர்கள் 11 லட்சம் பேருக்கு மத்திய அரசு அலுவலர்க்கு நிகரான ஊதிய விகிதங்களும் ஓய்வூதியங்களும் அளிக்கப்பட்டதில் மொத்தக் கூடுதல் செலவு ரூ. 430 கோடி ஆகும். பொது விநியோகம்—சத்துணவுத் திட்டம்—இலவச அரிசி வழங்குதல் ஆகியவற்றுக்கு மானியத் தொகையாக ரூ. 400 கோடி இழப் பினை ஏற்க வேண்டியதாயிற்று. இந்த இழப்புத் தொகையை ஓரளவாவது குறைக்கத்தான், மார்ச் 1-ஆம் நாள் முதல் அரிசி விலைகளில் மாறுதல் செய்தே தீர வேண்டிய அவசியம் ஏற் பட்டது. அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இந்த விலை குறைவானதுதான்,



10. பாலையில் ஒரு பசுஞ்சோலை போல, மதுவிலக்குச் சட்டத் தொடர்பான கடந்த கால ஆயத் தீர்வைக் குறை பாடுகளைக் களைவதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகளினால், கூடுதலாக ரூ. 100 கோடி கிடைக்குமென நான் அறிவித்திருந் ததற்கு மாறாக, ரூ. 134 கோடி கிடைக்குமென்பதை மாண்பு மிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. கள்ளச் சாராயத்தினால் தொடர்ந்து பல ஆண்டுகளாக துயர் மிகுந்த நிகழ்ச்சிகள் நமதுள்ளத்தைத் துளைப்பதாலும்—வேலியே பயிரை மேய்வது போலச் சமூக விரோதிகளுக்கு எதிர்பாராத இடங்களிலேயிருந்து கை குலுக்கல் கிடைப்ப தாலும்—அந்தத் தீங்குகளைக் களைந்தெறியும் நோக்கத்துடன் இந்தியா முழுமையும் உள்ள நிலையை எண்ணிப் பார்த்து, மலிவு மதுவைப் பொதுத் துறையில் உற்பத்தி செய்திட அண்மையில் இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதனால். வரும் ஆண்டில் ரூ. 180 கோடி கூடுதல் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

12. இத்தனை முயற்சிகளுக்குப் பிறகும்கூட, வரும் நிதி ஆண்டின் இறுதியில் நமது நிதி நிலை முழுமையான ஆறுதல் பெற முடியாததாகவே இருக்கும். இந்தச் சூழ்நிலையை மறவாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வரவு–செலவுத் திட்டத்தை ஆய்வு செய்து ஆக்க ரீதியான கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## ஆண்டுத் திட்டம்.

13. நடப்பு ஆண்டின் திட்ட ஒதுக்கீடு ரூ. 1360 கோடி என வரையறுக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் திட்டப் பணிகளுக்கான செலவு ரூ. 1377 கோடிக்குக் குறையாமல் அமையும்.

14. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு முதற்கண் ஏற்பளிப்புச் செலவு ரூ. 5750 கோடி எனினும், அத்திட்டக் காலச் செலவு ரூ. 6225 கோடி ஆக இருக்கும். எட்டாவது திட்டத்தில் மாநிலங்களுக்குரிய ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு களை மத்திய திட்டக் குழு இன்னும் இறுதியாக முடிவு செய்ய வில்லை. இருந்த போதிலும், வரும் ஆண்டுத் திட்டத்திற்காக தமிழ்நாட்டுக்கு ரூ. 1450 கோடி ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் தந்துள்ளது. வரும் ஆண்டு அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாக அமைவதால், திட்ட ஒதுக்கீட்டில் நடப்பு ஆண்டு இறுதிவரை செய்து முடிக்கப்பெறும் வளர்ச்சிப் பணிகள் மீதான செலவினங்கள் சேரமாட்டா. இந்தச் செலவினங்கள் திட்டத்தில் சேராப் பணி (Non-Plan) எனும் தலைப்புக்கு மாற்றப்படும். இவ்வாறு மாற்றப்படும் மொத்த ஒதுக்கீடு

சுமார் ரூ. 150 கோடியாகும். இந்த அடிப்படையில் ஒப்பு நோக்குமிடத்து, நடப்பு ஆண்டின் திட்டத் தொடர்பான பணி களுக்கு ரூ. 1377 கோடி என இருக்க, வரும் ஆண்டின் திட்ட ஒதுக்கீடு ரூ. 1450 கோடியும், ரூ. 150 கோடியுமாகச் சேர்ந்து ரூ. 1600 கோடியுமாகத் திகழ்கிறது.

15. வல்லுநர்கள் கொண்ட நமது மாநிலத் திட்டக் குழு தமிழகத்தின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரையறுத்து வடிவமைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இன்றைய நிலையில் எதிர் நோக்கக் கூடிய நிதி ஆதாரங்களை அடித் தளமாகக் கொண்டு, 1990-95 கால கட்டத்தில் எட்டாவது திட்டச் செலவாக, மொத்தம் ரூ. 8500 கோடியிலிருந்து சுமார் ரூ. 9000 கோடி அளவுக்கு வகை காண எண்ணியுள்ளோம். இந்தக் குறிக்கோளை எய்திட, வரத்து வாயில்களை வலிமைப் படுத்தி முன்னுரிமைப் பட்டியலுக்கு இணங்கச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

புதிய—மக்கள் நலத் திட்டங்கள்.

16. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நடப்பு ஆண்டில் பல புதிய மக்கள் நலத் திட்டங்களை நடை முறைப்படுத்தியதின் காரணமாகப் பெரும்பாலான மக்கள் பயனடைந்துள்ளனர்.

17. இந்த நிதி நிலை ஆண்டின் 11 மாதங்களில், அதாவது பிப்ரவரித் திங்கள் முடிய—

* 83 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஐந்து கிலோ அரிசி வீதம் ஐந்து முறை வழங்கியதில் ரூ. 38.12 கோடி செலவு.

* இலவசமாக வேட்டி, சேலைகள் 83 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ரூ. 42.25 கோடி செலவில் வழங்கப் பட்டுள்ளது.........

2. தகவல் கோரல்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒரு கட்சித் தொண்டர் சிறையிலிருப்பதாகக் கூறப்படுவது குறித்து.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, சிறையில் எங்கள் தோழர் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்று தகவல் வந்திருக்கிறது. உடனடியாக அவரை விடுதலை செய்ய உத்தரவிட வேண்டுகிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் கவனிக்க வேண்டும். இதுபோல இடையிலே குறுக்கீடு செய்தால் நான் வெளியேற்ற வேண்டியிருக்கும். (கூச்சல்—குழப்பம்)



திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே, உயிருக்கு ஆபத்தான நிலையில் ஒரு தொண்டர் சிறையில் இருக்கிறார். அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். திரு. இளையபெருமாள் அவர்களும்......(கூச்சல்—குழப்பம்)

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே,...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு முறைதான் (குறுக்கீடுகள்) அமர்ந்துவிடுவீர்கள் என்று நம்புகிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, யாருக்கு ஆபத்து என்றாலும் உடனடியாக விடுதலை செய்யப் படுவார்கள். நேற்று வழக்கு முடிவுக்காகத்தான் இந்த அரசு காத்துக்கொண்டிருந்தது. வழக்கு முடிந்துவிட்டது. எனவே அனைவருமே விடுதலை செய்யப்பட இருக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்) தமிழ் தெரியவில்லை என்றால் நான் என்ன செய்வது? (கூச்சல்—குழப்பம்) எல்லோரையும் விடுதலை செய்யுமாறு நேற்றைய, கோர்ட்டு தீர்ப்புக்குப் பிறகு....(கூச்சல்—குழப்பம்).

(காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் முன்னால் வரத் தொடங்கினர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் தங்களுடைய இடத்திலிருந்து வரக்கூடாது. அவரவர்களுடைய இடங்களுக்குப் போய் உட்காருங்கள்.

1. வரவு–செலவுத் திட்டம், 1990–91, அளித்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

*முதியோர் உதவித் தொகையும், உடல் ஊனமுற்றோர், விதவைகள், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு வழங்கும் உதவித் தொகைகளும் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 என்பதிலிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டு, எண்ணிக்கை வரம்பும் நீக்கப்பட்டதால், கூடுதலாக ஆகும் செலவு ரூ. 9.14 கோடியாகும். இதனால் 4.64 லட்சம் பேர் பயனடைகின்றனர்.

*ஏழைப் பெண்கள் திருமண உதவி ஐயாயிரம் ரூபாய் வழங்கும் ஏற்றமிகு திட்டத்தின்கீழ் 11,338 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூ. 5.59 கோடியாகும்.

*கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ. 200 வீதம் மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் 97,472 மகளிர் பயனடைந்துள்ளனர். இதற்கு ஆகியுள்ள செலவு ரூ. 1.95 கோடி.

*குடும்பத் தலைவர்களை இழந்துவாடும் வறிய குடும்பங் களுக்கு ரூ. 2,000 நிதி வழங்கும் திட்டத்தின் பயனை 10,517 குடும்பங்கள் பெற்றுள்ளன. இதற்கு செலவு ரூ. 2.10 கோடி.

*விபத்துக்களில் உயிரிழக்கும் அனைத்துவகைத் தொழிலாளர் களின் குடும்பங்களுக்கு ரூ. 10,000 நிதியளிக்கும் விபத்து நிவாரண திட்டத்தின்படி, 235 பாட்டாளிக் குடும்பங்கள் பயனடைந்து உள்ளன.

*சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, டாக்சி ஓட்டுநர்கள், தங்களின் சொந்தத்திற்கு வண்டிகளை உரிமையாக்கிக் கொள்ள உதவியளிக்கும் திட்டத்தின்கீழ், 5,287 பேருக்கு ரூ. 11.26 கோடி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 88.40 லட்சம் மூலதன மானியமாகவும்—ரூ. 18.30 லட்சம் வட்டிக்கான மானிய மாகவும் தரப்பட்டுள்ளது.

*ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்டவர், சீர்மரபினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வியளிக்கும் வகையில், 26,789 மாணவர்களுக்கு ரூ. 79.54 இலட்சம் செலவில் உதவி யளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை.

18. வேளாண்மைக்கும், அதனைச் சார்ந்த திட்டப் பணி களுக்காகவும் நடப்பு ஆண்டில் ரூ. 145.98 கோடி ஒதுக்கப்பட்ட தொகை, வரும் ஆண்டுக்கு ரூ. 160.29 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

19. அரிசி உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெறவில்லை யென்பதை கருத்திற்கொண்டு உற்பத்தித் திறனை அதிகப் படுத்துவதற்கான நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. இதற்கென பல சிறப்பு திட்டங்கள் வகுக்கப்பட்டு, செங்கை—அண்ணா, வட ஆற்காடு—அம்பேத்கார், திருவண்ணா மலை—சம்புவரையர், தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி, புதுக் கோட்டை, மதுரை, நெல்லை—கட்டபொம்மன் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

20. சான்றளிக்கப்பட்ட நெல் வித்து வழங்கும் திட்டம் இப்போது பயிரிடப்படும் பரப்பில் 14 விழுக்காடு பயனளிக்கிறது. இது 20 விழுக்காடு அளவுக்கு உயர்த்தப்படும். இதற்கென ரூ. 8.28 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வழங்கிடும் வித்துக்களும் பூச்சி கொல்லி மருந்துகளும் கிராமப் பகுதிகளில் தயக்கமின்றி புழங்கிட, இதற்கென ஏற்கெனவே உள்ள 783 விரிவாக்க நிலையங்களுடன், மேலும் 100 நிலையங்களை நிறுவிட ரூ. 35.23 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. வேளாண்மை விரிவாக்கப் பணிகளைச் சீரமைத்தல், சிறந்த விதை உற்பத்தி வசதிகளைப் படைத்தல், கால்நடை தீவன



மேம்பாடு காணுதல், நீர்வரத்துப் பகுதிப் பாசன நிர்வாகத் திட்டங்களைத் தீட்டுதல், சிற்றூர் சாலைகள் அமைத்தல் போன்ற வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்றை உலக வங்கியின் உதவியுடன் சுமார் ரூ. 170 கோடி செலவில் தொடங்க இருக்கிறோம்.

22. ''டேனிடா'' நிறுவனம் அளிக்கும் நிதி உதவியுடன் புன்செய்ப் பயிர்த் திட்டமொன்றும் ரூ. 6.25 கோடி செலவில் சிதம்பரனார், நெல்லை—கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் 44,000 ஏக்கரில் நிறைவேற்றப்படும். அத்துடன், வரும் ஆண்டு ரூ. 1.5 கோடி செலவில் மாநில முழுவதும் புதிய ஒருங்கிணைந்த புன்செய்ப் பயிர்த் திட்டமொன்று செயல்படுத்தப்படும். இதன் படி, 300 இடங்களில் ஒவ்வோர் இடத்திலும் 250 ஏக்கர் பரப்பு வீதம் மொத்தத்தில், 75,000 ஏக்கர் பரப்பில் புன்செய் வேளாண்மை மேம்படுத்தப்படும்.

23. விவசாயிகளின் நலன் கருதி, நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 180இல் இருந்து ரூபாய் 25 உயர்த்தி ரூபாய் 205 ஆக வழங்கப்படுவதுடன், உற்பத்தி ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூ. 35-ம் சேர்த்தளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கரும்பு விவசாயிகளுக்கும் டன் ஒன்றுக்கு ரூ. 30 விலை உயர்த்தித் தரப்படுகிறது. விவசாயிகள் பயன்படுத்தும் 3 குதிரைத் திறன் மற்றும் 5 குதிரைத் திறன் உடைய விசை யேற்றங்களில் (Pump sets) விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசின் வருவாய் இழப்பு ரூ. 4 கோடி.

24. விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் அளித்த வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய நிலுவை ரூ. 67 கோடியுடன் சிறு விவசாயிகளில் கடன் நிவாரணத் தொகை ரூ. 39 கோடியுடன் இணைந்து, ரூ. 106 கோடிக்கான பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

25. ஐந்து குதிரைத் திறனுக்கு குறைவான விவ்சாய மின்விசை ஏற்றங்களுக்கான மின் கட்டணம் ஒரு குதிரைத் திறனுக்கு ரூ. 75 என இருந்தது. ரூ. 50 என கடந்த அக்டோபர் மாதத்தில் குறைக்கப்பட்டது. இதனால் ஒன்பது இலட்சம் விவசாயிகளுக்கு நன்மை. அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு வருவாய் இழப்பு ரூ. 10 கோடி.

26. எனினும் இப்போது ஏழரை மற்றும் பத்து குதிரைத் திறன் வரையில் உள்ள கட்டணமான ஒரு குதிரைத் திறனுக்கு ரூ 75 என்பது, ரூ; 50 ஆகக்குறைக்கப்படும். இதனால், மேலும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 3 கோடி கூடுதல் இழப்பு ஏற்படும். மேலும் சுமார் ஒன்றரை லட்சம் விவ்சாயிகள் பயனடைவார்கள்.

## காட்டு வளம்.

27. மழை வளம் தருவதற்கு மட்டுமல்ல—பல்வகைத் தரு வளத்தினால் மாநில நிதி நலம் காப்பதிலும், காட்டு வளத்திற்கு உரிய பங்கு உண்டு. அந்த வளம் கொழித்து செழித்திட, கோவையில் ''மாநில காடு வளர்ப்பு—வன விலங்கு ஆராய்ச்சி நிறுவனம்'' ஒன்றை ஆரம்பித்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு ஆராய்ச்சிப் பணிகளை ஆற்றிடும். வனத் துறைப் பணியாளர்களுககுப் பயிற்சியும் அளிக்கும்.

28. சமூகக் காடுகள் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 16.13 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் நிதி உதவி தருகிறது. 35,000 ஏக்கர் பரப்புள்ள சமூகக் காடுகள் இத்திட்டத்தின்கீழ் வரும் ஆண்டில் கொண்டுவரப்படும்.

29. நீலகிரி, பழநி மலைப் பகுதிகளில் அழிந்து வரும்காடுகளை மீண்டும் உருவாக்கி வளர்த்திட, ரூ. 120 கோடி செலவில் விரிவான திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரித்துள்ளோம். இந்த முயற்சிக்கு மத்திய அரசின் இசைவு கிடைக்குமென எதிர் பார்க்கிறோம்.

## கால்நடைச் செல்வம்.

30. கால்நடைச் செல்வம் பெருகிட—அது வலிவும் பொலிவும் மிக்கதாகத் தழைத்திட—ஆசியாவிலேயே முதன் முதலாக ''தமிழ்நாடு கால்நடை மருத்துவம்—அறிவியல் பல்கலைக் கழகம்'' எனும் தனிப் பல்கலைக் கழகத்தை நடப்பு ஆண்டில் சென்னையில் தொடங்கியுள்ளோம். இப் பல்கலைக் கழகத்துக்கு வரும் ஆண்டு திட்ட ஒதுக்கிடாக ரூ. 3.91 கோடி அளிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் கால்நடைக் கல்லூரியை மேம்படுத்தும் பணிகளும் விரைவுபடுத்தப்படும்.

31. வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1.22 கோடி ஒதுக்கப் பட்டுள்ள செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டம், ஐரோப்பிய பொருளாதார நிதிக் குழுவின் உதவியுடன் மொத்தம் ரூ. 13.67 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, செங்கை-அண்ணா, வட ஆற்காடு-அம்பேத்கார், சேலம், தருமபுரி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

32. கால்நடைத் தீவன மேம்பாட்டுககுத் தனி முக்கியத்துவம் அளிக்கும் கால்நடை வளர்ப்புத் திட்டமொன்று, ரூ. 4.4 கோடி செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. வரும் ஆண்டில் புதிதாகப் பத்து கால்நடை மருந்தகங்கள் நிறுவப்படும்.



33 தேசிய பால் வளவாரியத்தின் நிதி உதவியுடன் ரூ. 68.19 கோடி செலவில், 13 மாவட்டங்களில் பெரிய பால்பண்ணைத் திட்டமொன்றைத் தொடங்கிட இருக்கிறோம். தற்போதுள்ள, பால்பண்ணைகளில் பால் உற்பத்தித் திறன் அதிகரிக்கப் படுவதுடன், செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் புதிய பால் பண்ணைகள் அமைக்கப்படும். பால் உற்பத்தியின் அளவு நாள் ஒன்றுக்கு 12.5 லட்சம் லிட்டர் என்பதிலிருந்து திட்ட கால முடிவில் நாள் ஒன்றுக்கு 27.6 லட்சம் லிட்டர் என்ற சாதனை நிகழ்த்தப்படும்.

## மீனளம்.

34. தமிழ்நாட்டில் சுமார் 37,000 ஏக்கர் உவர் நீர்நிலைப் பகுதிகளை பயன்படுத்தி இறால் வளர்ப்பை மேம்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. வரும் ஆண்டில் சுமார் 5,000 ஏக்கரில் இறால் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்படும். சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் வரும் ஆண்டில் ரூ. 6.84 கோடி செலவில் அமைக்கப்படும். தொண்டியில் படகுத் துறை இம்மாதம் முதல் செயல்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி வடிமுனைப் பகுதியில் நிலத்தில் நீர்த்தேக்க அளவை உயர்த்தி மீன் உற்பத்தித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். (Farm Pond Scheme.)

35 மீனவக் குடும்பங்களுக்கு நாடப்பாண்டில் 3,000 விடுகளும், வரும் ஆண்டில் மேலும் 3,000 விடுகளும் கட்டி முடிக்கப்பட்டு இலவசமாக வழங்கப்படும்.

## பட்டுப் புழு வளர்ப்பு.

36. உலக வங்கியின் நிதி உதவியுடன் பத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்ற பட்டுப் புழு வளர்ப்பு திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் 14,000 பேருக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 3.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இராமப்புற வளர்ச்சி.

37. 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட திருத்தங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். இத் திருத்தங்களின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுதல், ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் குறிப்பிட்ட திட்டப் பணிகளை ஒப்படைத்தல், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகிய வற்றின் நிதிநிலை மேம்படுத்தும்பொருட்டு வல்லுநர் ஆய்வுக்

குழு ஒன்றை அமைத்தல் ஆகியவற்றுக்கு வகை செய்துள்ளோம். முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் நிதியாதாரங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து அவற்றை வலுப்படுத்துவதற்கு பரிந்துரைகளைச் செய்யும்.

38. மேலும், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி வேளாண்மை—அதைச் சார்ந்த பணிகள், சிறு ஏரிப் பாசனம், எழுத்தறிவு இயக்கத் திட்டங்கள், தொடக்க, இடைநிலைக் கல்வி, பொதுச் சுகாதாரத் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள், சிலவகைப் வழங்கும் திட்டங்கள், கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் போன்ற குடிநீர் பணிகளைச் செயற்படுத்துவது குறித்து ஊராட்சி ஒன்றியங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்யலாம் என அரசு தற்போது முடிவு செய்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களும் அடிக்கடி கலந்து ஆலோசனை செய்வது அத்திட்டங்களை முழுப் பயனுள்ள வகையில் செயற்படுத்த உதவும் என்று நம்புகிறோம்.

39. கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள், சுகாதாரத் துணை நிலையங்கள், குழந்தை நல நிலையங்கள், சிறு பாசன வாயில்களைப் பெறுதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்காகப் பல்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நமது மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இப்பொழுது உள்ள வசதிகளைக் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டு, அதன்மூலம் குறைபாடுகளைக் கண்டறிந்து, அடுத்த ஐந்தாண்டுகளில் திட்டமிட்ட முறையில் கூடுதல் வசதிகளை ரூ. 250 கோடிக்கு மேல் செலவிட்டு உருவாக்க முடிவெடுத்துள்ளோம். இப்புதிய திட்டத்திற்காக வரும் ஆண்டில் ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இத் தொகையில் அரசு ரூ. 25 கோடி வழங்கும். எஞ்சிய தொகையை ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் நிதிநிலைக் கேற்க வழங்கும். இத்திட்டங்களை நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியங்கள் நேரடியாகப் பொறுப்பேற்கும்.

பாசனம்.

40. ''நீரின்றி அமையாது உலகு'' எனும் வாசகத்தை நெஞ்சில் நிறுத்திப் பாசன வசதிக்கான திட்டங்களுக்கு கடந்த காலந்தொட்டு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.



வரும் ஆண்டில் செங்கோட்டை வட்டத்தில் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 6000 ஏக்கர் நிலம் பயன்பெறக்கூடிய அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 21 கோடி மதிப்பீட்டுச் செலவில் 6,500 ஏக்கர் நிலம் பயன்பெற கூடிய பழனி வட்டம் நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 7,000 ஏக்கர் பயன் பெறக் கூடியதும் ரூ. 19.5 கோடி மதிப்பீட்டுச் செலவு ஆகக் கூடியதுமான மோர்தானா திட்டப் பணி மேற்கொள்ளப்படும்.

பெரியாறு வைகைப் பாசன நவீனப்படுத்தும் திட்டம் இரண்டாவது கட்டப் பணி இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தப்படும். இதனடிப்படையில் ரூ. 25 கோடி செலவில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளப் பட்டு நிலக்கோட்டை மற்றும் பெரியகுளம் வட்டங்களில் மேலும் 4000 ஏக்கர் பரப்புள்ள நிலம் பயன்பெறும்.

ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் செயற்படுத்தப் படும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் இரண்டாம் கட்டப் பணி களுக்கு இந்த வரவு-செலவு திட்டத்தில் ரூ. 7.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் ''காவேரி மேட்டூர் பாசனத் திட்டப் பகுதியில் நீர்வளம் எய்திட ஒருங்கிணைந்த ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கவும். ஏரிகளை நவீனப் படுத்தவுமான திட்டத்துக்கு, முதல் கட்டமாக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கப்படும்.

* மொத்தம் ரூ. 52.7 கோடி செலவில் சுமார் 3.75 லட்சம் ஏக்கர் பரப்பிற்குப் பயன்தரக்கூடிய தேசிய நீர் நிர்வாகத் திட்டத்திற்கு ரூ. 12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தினால், சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பள்ளத்தாக்கு ஆகிய பகுதி களின் மக்கள் வளம் பெருக்கி உளம் மகிழ்வர்.

41. திரு. ஆர். திருமலை தலைமையில் பாசனநீர் ஆதாரங்கள் குறித்த நிலைக் குழு, நடப்பு ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இந்தக் குழு, பழைய மற்றும் புதிய பாசன ஏற்பாடுகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு—பெரியார், நெல்லை—கட்டபொம்மன் சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 10 பெரும் திட்டங்கள்பற்றியும், அவற்றால் கிடைக்கும் பலன்களை மேம் படுத்தும் வழிவகைபற்றியும் அரசுக்குப் பரிந்துரைகளை அளித் துள்ளது.

### மின்சக்தி

42. அனலில், புனலில், அணுவில், கதிரொளியில், காற்றசைவில், கடல் அலையில் உற்பத்தியாகி, உலகை இயக்கும் பெரும் சக்தியாய் உள்ள மின்சக்தியைப் பெருக்குவதில் இந்த அரசு மிகுந்த ஆர்வங்கொண்டு, மேற்சொன்ன எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திட முனைந்துள்ளது.

43. வரும் ஆண்டு மின்சக்தித் துறைக்கென ரூ. 455 கோடி திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடையூறுகளைக் களைந்து கடந்த ஜூலைத் திங்கள் முதல் நாளில் தொடங்கப்பட்ட வட சென்னை அனல் மின் நிலையத்தின் 420 மெகாவாட் திறன் கொண்ட முதலிரண்டு பிரிவுகளில் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. மேலும், 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது பிரிவை அமைப்பதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவி உறுதி செய்யப்பட இருக்கிறது. இந்த மின் நிலையம் இறுதியாக 2,050 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறனுடையதாக விளங்கும்.

44. 1991 ஆம் ஆண்டில் கூடுதலாக 420 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டப் பணிக்கு ரூ. 135 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

45 ஜப்பான் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த எரிவாயு மின் உற்பத்தித் திட்டம் ஒன்றை பேசின் பிரிட்ஜ் நிலையத்தில் அமைக்கும் பணி வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இது 120 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். காவிரி ஆற்றுப் படுக்கையில் உள்ள எரி வாயுவைக் கொண்டு கூடுதலாக 300 மெகாவாட் உற்பத்தித் திறன் பெற திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

46. திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டான் பகுதியில் உள்ள லிக்னைட் படிவங்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்திட நெய்வேலி நான்காவது சுரங்கத்தைத் தொடங்கவும் மத்திய அரசைக் கேட்டு வருகிறோம்.

47. மின்சாரத்தை எடுத்துச் செல்லவும், வழங்கவும் வரும் ஆண்டின் திட்டச் செலவில் ரூ. 155 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், 40,000 விவசாய விளைநிலங்களுக்கு மின் இணைப்பு தரவும்—40,000 குடிசை வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு தரவும் முடியும்.

48. வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு, நிலக்கரி, கலிங்கா நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கொண்டு வர வேண்டும். இதனை ரயில் மற்றும் கப்பல் போக்குவரத்து மூலமாக எடுத்து வர வேண்டும். எனவே, வடசென்னையில் உள்ள எண்ணூரில் துறைமுகம் ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்கென



சென்னைத் துறைமுகம் ரூ. 288 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. இதற்கு உடனே அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசின் முன் வைத்துள்ளோம்.

### தொழில்கள்.

49. தமிழ்நாட்டைத் தொழில் மயமாக்கிட நமது அரசு உறுதி பூண்டுள்ளது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு எடுக்கப்பட்டுள்ள முக்கியமான நடவடிக்கைகள் ஆளுநர் உரையில் எடுத்துக் காட்டப்பட்டன.

50. கூட்டுத் துறை மற்றும் தனியார் துறையில் தொழில் வளர்ச்சிக்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் கூடவே, மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைத்துச் செம்மைப்படுத்த உரிய முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

51. நிர்வாகச் சீர்கேட்டின் காரணத்தால் உரிய வருவாயைப் பெறாமல் இயங்கிக் கொண்டிருந்த தமிழ்நாடு கனிம வளர்ச்சி நிறுவனம், இந்த ஆண்டில் 4 கோடி ரூபாய் லாபம் ஈட்டும் நிலைக்குச் சீர் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 4.35 கோடி முதலீட்டுடன் புதிதாக கிரானைட் ஓடு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

52. தமிழ்நாடு பத்திரிகை அச்சுத் தாள்கள் — காகித நிறுவனம் 1988–89 வரையில் தொடர்ந்து இழப்பில் இயங்கியதனால் மொத்த நட்டம் ரூ. 49.95 கோடி அளவிற்குச் சென்றது. இந்த நிறுவனம், நடப்பாண்டில் ஏறத்தாழ ரூ.28 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது இது ஓர் அரும் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி.)

53. வி. சி. பி., வி. சி. ஆர். தயாரிப்புத் திட்டத்தையும் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தின் விரிவுத் திட்டத்தையும் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்றும், சேலம் உருட்டு ஆலையை, ஒருங்கிணைந்த உருக்கு ஆலைத் தொகுதியாக அமைக்க வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

54. இம்மாநிலத்தில் பல்வேறு பெட்ரோலிய ரசாயன பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏதுவாக, தென்னகத்திற்கான எரிவாயு இணைப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம்.

55. ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன், மணலியில் நாப்தா தொழிற்சாலை (Naphtha Cracker) ஒன்றை அமைப்பதற்கு மத்திய

அரசிடம் தொடர்ந்து கேட்டு வருகிறோம். இந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு ரூ. 1,800 கோடி முதலீடு செய்யவேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. மணலியில் அமையவிருக்கும் நேஷனல் ஆரோமேடிக் தொழிற்சாலைக்கு விரைந்து இசைவளிக்குமாறும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம். இதற்கு சுமார் ரூ. 1,356 கோடி முதலீடு தேவைப்படும். இந்தப் பெருமளவிலான முதலீட்டுத் திட்டங்கள் அனைத்தும், பல துணைத் தொழில் நிறுவனங்கள் தோன்றுவதற்கு வழி வகுக்கும். குறிப்பிடத்தக்க அளவிற்கு கூடுதல் வேலைவாய்ப்பைத் தோற்றுவிப்பதுடன், நமது மாநிலத்தின் வருவாயையும் பெருக்கும்.

56. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை—சிப்காட் நடத்தும் தொழில் வளாகங்களிலும் ஏற்கெனவே இவ்வரசு அறிவித்துள்ள 105 வட்டங்களில் மிகவும் பின்தங்கிய சில வட்டங்களிலும் புதிதாக ஏற்படுத்தக்கூடிய தொழில்களுக்கு, மூலதனச் செலவு அளவுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும். இதற்கான விவரங்கள் தொழில் மானியத்தில் அறிவிக்கப்படும்.

## சிறு தொழில் வளர்ச்சி.

57. ஜனவரித் திங்களில் சிறு தொழில் அதிபர்களுடன் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளேன். அவர்களும் பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளை கவனத்துடன் ஆய்வு செய்து சிறு தொழில் வளர்ச்சிக்கென சில முடிவுகள் அறிவிக்க விரும்புகிறேன்.

58. சுற்றுப்புறச்சூழல் பாதிக்காமல் இருப்பதற்கு மாசு கட்டுப்பாடு நிறுவனத்திடம் சிறு தொழில்களும் சான்றிதழ் பெற வேண்டிய நிலையில் உள்ளன. இதனால் தாமதங்களும், கட்ட வேண்டிய மேல் வரியின் பளுவும் அதிகமாக இருப்பதாக ஒரு குறைபாடு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனைக் களையும் பொருட்டு, விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள சுமார் 40 தொழில்கள் போக, மேலும் சுமார் 60 தொழில்களுக்கு விலக்கு அளிக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

59. விற்பனை வரி ஒத்திவைப்பு (Sales tax deferral) புதிய சிறு தொழில்களை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். இதனை செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்படுகின்றது என்று முறையிடப்பட்டுள்ளது. இதனைக் களையும் பொருட்டு, மாவட்ட அளவில் உள்ள வணிக வரி அதிகாரிகளுக்கு ஒத்திவைப்பு ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்படும்.

60. புதிய சிறு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்றால் பல துறைகளிடம் சான்றிதழ்கள் பெறவேண்டிய



சூழ்நிலை இருக்கின்றது. இதில் தாமதம் தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இனிமேல் அனைத்துச் சான்றிதழ்களையும் குறிப்பிட்ட 30 நாட்களில் வழங்க வேண்டுமென்ற முறை பின்பற்றப்படும்.

61. தொழில் மையங்களில் விற்கப்படும் தொழில் மனைகளுக்கு முத்திரைத்தாள் வரி விலக்கு முழுமையாக அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆணைகளும் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## சுற்றுப்புறச் சூழல்.

62. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொள்ளும். நீண்ட நாட்களாக தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரினால் பொதுமக்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படுகின்றது. இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்ற முயற்சியில் தற்போது வெற்றி கண்டு உள்ளோம். கழிவு நீர் கூட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ. 15.76 கோடி செலவில் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, திண்டுக்கல், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்படும். இதில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கு தனித்தனியாக ரூ. 3.69 கோடி மானியமாக அமையும்.

63. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (HUDCO) மானியம் மற்றும் கடன் வசதி பெற்று, 21 நகராட்சிகளில் ரூ. 29 கோடி செலவில் 1.07 லட்சம் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் தண்ணீர் வசதியுடன் உள்ள (பிளஷ் அவுட்) கழிப்பிடங்கள் கட்டப்படும்.

64. சென்னை மாநகராட்சியில் உள்ள கூவம், அடையாறு மற்றும் இதர நீர் வழிகளைச் சுத்திகரிக்கும் முறைகளைப் பற்றி இங்கிலாந்து நாட்டு வல்லுநர் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த சுத்திகரிப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

## கைத்தறி.

65. நடப்பு நிதி ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரூ. 26.38 கோடி தள்ளுபடித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கமாகக் கொடுக்கப்படும் 20 சதவீதம் தள்ளுபடி, இந்த ஆண்டில் 90 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்காக

வரும் ஆண்டிற்குத் தள்ளுபடித் தொகையாக ரூ. 27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு அதிக நன்மை பயக்கும் வகையில், தள்ளுபடித் தொகை வழங்கும் திட்டம் சீராகச் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் ரூ. 1.5 கோடி செலவில் கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டம் மேற் கொள்ளப்படும்.

66. மாநில அளவிலான கைத்தறி ஆலோசனைக் குழு நடப்பாண்டில் அமைக்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்கள் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 1.48 இலட்சம் நெசவாளர்கள் தற்போது உள்ளனர். தற்போது இந்தத் திட்டம் நெசவாளர்களுக்கு கூடுதல் காப்புறுதித் தொகையாக ரூ.3,000 மட்டுமே கொடுக்க வகை செய்கிறது இத் தொகை வரும் ஆண்டில் ரூ. 10,000 ஆக உயர்த்தப் படும் (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் ஏற்படும் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 30.45 லட்சம் ஆகும்.

67. வரும் ஆண்டில் வீட்டு வசதி நகரப் பகுதி வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ5 கோடி மொத்தச் செலவில் நெசவாளர்களுக்கு 2000 தறிக் கூடத்துடன் அமைந்த வீடு கட்டும் பணி மேற்கொள்ளப்படு விசைத்தறி நிதி இயங்கச்செய்யப்படும். அந்நிதி, மொத்தம் ரூ. 25 லட்சம் செலவில் விசைத்தறிகளுக்கான பணி வசதி நிலையங்கள் (Service centres) இரண்டினை அமைக்கப் பயன் படுத்தப்படும்.

68. இம்மாநிலத்தில் தற்போது மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. 1988-89 ஆம் ஆண்டில், ஒரு நூற்பாலை தவிர அனைத்தும் நட்டத்தில் இயங்கி வந்தன. இந்த அரசு ஏற்பட்ட பிறகு, நடப்பாண்டில் இரண்டு நூற்பாலை களைத் தவிர மற்ற அனைத்தும் இலாபத்தில் இயங்கத் தொடங்கி யிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், குவிந்துள்ள நட்டத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணவும், நவீனப்படுத்தும் தேவையை நிறைவேற்றவும் வேண்டி யுள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடன் ரூ. 31 கோடி மொத்தச் செலவில், 12 ஆலைகளில், "முழுமை யாக நவீனமயமாக்கும் திட்டம்" மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ளது.

சாலைகள்-போக்குவரத்து.

69. கொடிக் கம்பங்கள் போல நிமிர்ந்து நீண்டும், வான வில்லைப்போல வளைந்தும், நகர்ப்புறங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகளையும், பெருஞ்சாலைகளையும் கண்டு, சேற்றிலும் சகதியிலும் கால் புதைய நடந்து கொண்டிருந்த



கிராமப்புறத்து மக்கள் ஏக்கப் பெருமூச்சு விடுவதைத் தவிர்த்திட அவர்களுக்கும் நல்ல போக்குவரத்து சாலை வசதிகளைத் தருவ தற்காக, 1972 ஆம் ஆண்டிலேயே இந்த அரசு பொறுப்பிலே யிருந்த போது 1500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இராமங்கள் அனைத்தையும் முக்கிய சாலைகளுடன் இணைக்கிற வலிவான சாலைகளை அமைக்கும் முயற்சி முதல் கட்டமாக தொடங்கப்பட்டது. இடையில் தயக்கமுற்ற இந்தப் பணி வரும் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, தொடர்ந்து அடுத்த கட்டமாக 1,000 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக வரும் ஆண்டில் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்னியில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தும் புதிய திட்டத்திற்காக ரூ. 10கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

70. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நகர் மன்றப் பகுதிகளில் சாலைகள் அமைக்க ரூ. 12.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

71. கிழக்குக் கடற்கரைச் சாலையின் முதல் கட்டமாக சென்னையிலிருந்து கடலூர் வரை செல்லும் சாலைப் பணி ரூ. 53 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு வரும் ஆண்டில் ரூ. 5.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

72. பல்வேறு இடங்களில் 100 சிறிய பாலங்களைக் கட்டுவதற்காக ஒரு புதிய திட்டம் ரூ. 5 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

73. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் புதிய சாலை மேம்பாட்டு வேலைகள் ரூ. 27.71 கோடி செலவில் ஆரம்பமாகும். மேலும், இம் மாநகரின் போக்குவரத்துப் பிரச்சினை எதிர்காலத்தில் மிகவும் சிக்கலாகிவிடாமல் தடுத்திட முன் எச்சரிக்கையாக ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

74. குறிப்பாக, நடப்பு ஆண்டில் சாலைகளுக்கென் ஒதுக்கப் பட்டது. ரூ. 146 கோடியாக இருக்க, வரும் ஆண்டில் அது ரூ. 187 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாலைகளைப் பழுது பார்த்துப் பராமரிக்க. நடப்பு ஆண்டில் ரூ. 62.65 கோடி என ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, வரும் ஆண்டில் ரூ. 80.27 கோடியாக அத்தொகை பெருகியுள்ளது.

75. சென்னையில் விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்
திற்கும் கரூர்—திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டத்திற்கும்
போதுமான நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று ரயில்வே
அமைச்சருக்குக் கடிதம் எழுதி இருந்தேன். தற்போது ரயில்வே
நிதிநிலை அறிக்கையில் சென்னை விரைவு ரயில் போக்குவரத்து
திட்டத்திற்கு நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9.80
கோடியாக இருக்க, வரும் ஆண்டில் ரூ. 14 கோடியாக உயர்த்தி
ஒதுக்கப்பட்டுள்ளது. கரூர்—திண்டுக்கல் அகல ரயில் பாதைத்
திட்டத்திற்கு நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 4
கோடியை வரும் ஆண்டில் ரூ. 13 கோடியாக உயர்த்தப்
பட்டுள்ளது. நம்முடைய முறையீட்டிற்கு இணங்க ஓரளவு
கூடுதல் ஒதுக்கீடு அளித்திருந்தாலும், இந்த இரண்டு திட்டங்களும்
இன்னும் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்
கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவோம்.

76. சென்னையிலிருந்து கடலூர் வரை கடலோர மார்க்கமாக
[Hover craft/S.E;S. (ferry)] சர்பயணப் படகுப் போக்குவரத்து
தொடங்க விரைவில் முயற்சிகள் தொடரும்.

## கல்வி.

77. கல்வித் துறைக்குத் தலையாய முன்னுரிமை அளித்து,
வரும் ஆண்டிற்கு ரூ. 1,050 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நமம்
மாநிலத்தில் 6 முதல் 11 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளும்
பள்ளிப் படிப்புக்காக பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இருநூறுக்கு
மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 439 குடியிருப்புகளுக்கு ஒ
கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஆரம்பப் பள்ளிக்கூடம் கூட
இல்லாத நிலை இன்னும் நிலவுகிறது. இந்தக் குடியிருப்புகள்
அனைத்திலும், வரும் ஆண்டில் புதிய ஓராசிரியர் ஆரம்பப்
பள்ளிகள் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). 11
வயதிலிருந்து 14 வயது வரை உள்ள சிறுவர்களுக்கான மொத்த
எண்ணிக்கையில் 80 சதவீதத்தினர் பள்ளிப் படிப்புக்காக பதிவு
செய்துள்ளனர். இருப்பினும், இடைநிலைப் பள்ளிகளுக்குப்
போதுமான ஆசிரியர்களும் வசதிகளும் இல்லை. ஆகவே, வரும்
ஆண்டில் கூடுதலாக 1,200 இடைநிலை ஆசிரியர்களை நியமனம்
செய்வதற்கு வகை செய்துள்ளோம் (மேசையைத் தட்டும் ஒலி).
இந்த ஆசிரியர்கள் மாதத்திற்கு ரூ. 800 எனத் தொகுப்பூதி
யத்தில் நியமனம் செய்யப்படுவார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப்
பிறகு அவர்கள் ஊதிய விகிதங்களில் முறைப்படுத்தப்பட்டு நியமிக்
கப்படுவார்கள்.

78. 1990 ஆம் ஆண்டு சிறுமியர் ஆண்டாக அறிவிக்கப்
பட்டுள்ளது. இதனை மனதில் கொண்டு சிறுமியர்களைப் பள்ளிப்
படிப்பிற்கு பதிவு செய்வதற்காகவும், அவர்கள் பள்ளியிலிருந்து





விலகும் நிலையைத் தவிர்க்கவும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்
படும். ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களைச் சரிவரப் பராமரிக்கவும்
பழுதுபார்க்கவும் நிதி நிலை அறிக்கையில் ரூ. 3 கோடி ஒதுக்கீடு
செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கான பயிற்சி நல்ல
முறையில் அமைய வேண்டும் என்ற நோக்கத்தில், எஞ்சியுள்ள ஏழு
மாவட்டங்களில், மாவட்டக் கல்விப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்
படும். ஆசிரியர் பயிற்சியை செம்மையாக நடத்துவதற்கும் நல்ல
முறையில் கண்காணிக்கவும் ஒரு இயக்ககம் ஏற்படுத்தப்படும்.

79. தொழில் பயிற்சி நிலையங்களின் மேம்பாட்டிற்கென
ரூ. 3.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்
தின்கீழ், மகளிருக்காக மூன்று புதிய தொழில் பயிற்சி நிலையங்கள்
சேலம், கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்
படுவதுடன், பிற பயிற்சி நிலையங்களிலுள்ள வசதிகளும் மேம்
படுத்தப்படும்.

80. 1989—90 ஆம் ஆண்டில் இந்த அரசு, 16,000 கல்லூரி
ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில், ரூ. 57.38 கோடி செலவில்
அவர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்
களை வழங்கியது. பொறியியல் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்
கல்வி நிலையங்களிலும் பணியாற்றும் 4,000-க்கும் மேற்பட்ட
ஆசிரியர்களுக்கு ரூ. 19.45 கோடி செலவில் அனைத்திந்திய
தொழிற்கல்வி மன்றத்தின் ஊதிய விகிதங்களும் வழங்கப்
பட்டுள்ளன.

81. மதுரைக்குத் தெற்கு பகுதியில் உள்ள கல்லூரிகளை இணைத்து
ஒரு பல்கலைக் கழகம் திருநெல்வேலி நகரில் அமைய இருக்கிறது
என்பதுடன், அந்தப் பல்கலைக் கழகம் நீராரும் கடலுடுத்த எனத்
தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்தினை வழங்கிய மாமேதையின்
நினைவாக மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்
(மேசையை தட்டும் ஒலி) என்ற பெயரில் அமையும் என்பதையும்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ் வளர்ச்சியும் பண்பாடும்.

82. கடந்த நிதிநிலை அறிக்கையில் கூறியதற்கொப்ப முன்பு
கழக அரசால் தொடங்கி இடையில் நிறுத்தப்பட்டிருந்த "அகர
முதலி" திட்டம் மீண்டும் புதிய இயக்கமாகத் தோற்றுவிக்கப்
பட்டு உயிர் எழுத்துக்களின் தொகுப்புப் பணி முடிந்துள்ளது.

83. தமிழ்நாட்டு வரலாற்று வரைவுத் திட்டம் ஏற்கெனவே
கழக அரசால் தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்
பட்டிருந்தது. மீண்டும் நடப்பாண்டில் தொடரப்பட்டு பிற்
காலப் பாண்டியர், பல்லவர் தொகுப்பு முடிந்து அச்சுக்குத்
தரப்பட்டுள்ளது.

84. நற்றிணை, பரிபாடல், கம்ப ராமாயணம் ஆகிய இலக்கியங்களின் ஆங்கில மொழியாக்கம் உவிலை நடையிலேலே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

85. தமிழர் பண்பாடு, வரலாறு, இவற்றினை மேலும் அறிவதற்கு ஏற்றவகையில் பூம்புகார் கடல் அகழாய்வு, கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆய்வு நிறுவனத்தின் ஒத்துழைப்போடு மூன்றாண்டு திட்டமாக செயற்படுத்த, வரும் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

86. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற்கொப்ப உலகத்தின் பல பகுதிகளில் தமிழ்மொழி பேசுவோர் பரந்து காணப்பட்டாலும் தமிழை அவர்கள் சிறப்பான முறையில் பயிலுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். அவர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையில் தமிழில் பாட நூல்கள் எளிய தமிழ் அகராதி—எளிய தமிழ் இலக்கணம் ஆகியவற்றைத் தமிழ் வல்லுநர்கள் ஒத்துழைப்புடன் வெளியிடுவதற்கும், தொன்மையான தமிழ்மொழி, தற்காலச் சமூகவியல், அறிவியல் வளர்ச்சி ஆகியவைகளுக்கேற்ப வளம் பெறுவதற்குரிய வழி, நிலைகள் மேற்கொள்ளப்பட்டு—உலகப் புகழ் பெற்ற நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து மலிவு விலையில் வெளியிடுவதற்கு சென்னையில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தை தமிழ் இலக்கியம், கலை, மரபு, பண்பாட்டுக் கூறுகளை வளர்க்கும் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும்—அரசுக்கு கருத்துக் களைக் கூறி செயல்பட தமிழ் வல்லுநர்களைக் கொண்ட தமிழ் இயக்கக் குழு ஒன்று அமைக்கப்படும்.

87. நீண்டகாலக் கனவு நிறைவேறும் வகையில் நீலத்திரைக் கடலோரத்தில் நித்தம் தவம் புரியும் குமரி முனையில் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர்க்கு குறளின் அதிகாரங்களைக் குறிக்கும் வண்ணம் 133 அடி உயரமுள்ள மாபெரும் சிலையொன்று அமைக்கும் பணி இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை உவகை பொங்கிடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

### பாவேந்தர்—அம்பேத்கார் நூற்றாண்டு விழாக்கள்.

88. இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என முரசு கொட்டி—பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியில் வா என, இளைய தலைமுறைக்கு அழைப்பு விடுத்து எழுச்சியுற்ற பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என மகளிர் மாண்புரைத்து காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் அவன் காணத் தகுந்தது வறுமையா? எனப் பொங்கியெழுந்து புதியதோர் உலகு செய்வோம் எனப் புரட்சிக்குரல் ஒலித்து நம்மிடையே சிங்கமெனச் செம்மாந்து உலவிய பாவேந்தர்



பாரதிதாசனின் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு தொடங்குகிறது. அஃதே போல் அரசியல் மேதை—அறிஞர் பெருந்தகை—அடக்கப் பட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்கு உடைத்தெறிய ஆர்த்தெழுந்த ஆற்றலாளர் அண்ணல் அம்பேத்காரின் நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டிலேதான் வருகிறது. இந்த இரு பெருந் தகையாளர்களின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் தரும் வண்ணம் இருவரின் நூற்றாண்டு விழாக்களையும் நமது அரசு சிறப்புடன் நடத்திடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். (மேசையை தட்டும் ஒலி.)

### மக்கள் நல்வாழ்வு

89. கிராமப்புற சுகாதாரக் காப்புப் பணிகளுக்காக, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு தொடக்க சுகாதார நிலையம் என்றும் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை நிலையம் என்றும், மாநிலம் முழுவதும் 9,946 சுகாதார நிலையங்கள் அமைந்துள்ளன. இந்த சுகாதார நிலையங்களில் உரிய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை முழு அளவில் நியமிக்கவும் அவற்றிற்குக் கட்டிடங்கள், சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

90. சென்னை மாநகரில் உலக வங்கியின் உதவியுடன் குடும்ப நலத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வந்துள்ளோம். தமிழ்நாட்டில் உள்ள எல்லா நகர்ப்பகுதிகளுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவு படுத்தப்படும். இதற்கு மொத்தம் ரூ.60.71 கோடி செலவிடப்படும். இத்திட்டத்தின் மூலம், நகரங்களில், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குடும்ப நலம், சுகாதாரக் காப்பு அளிக்கப்படும்.

91. தமிழ்நாடு அரசு மருத்துவவியல் ஆராய்ச்சி நிறுவனம் (தாமரை), மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மருத்துவக் கல்வித் துறையில் ஓர் உயர் சிறப்பு மையத்தை நிறுவ வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதற்கென ரூ.115 கோடி செலவில் பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பல கட்டங்களில் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

92. மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றில் தரத்தை உயர்த்துவதற்கு டாக்டர் பி. ராமமூர்த்தி தலைமையில் அமைந்த வல்லுநர் குழு பல முக்கியமான பரிந்துரைகளை அளித்துள்ளது. இவை ஆராயப்பட்டு, எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். பட்டப் படிப்பை முடித்துப் பணியாற்றக்கூடிய மருத்துவர்களுக்குத்

தொடர் கல்வி (Continuing Medical Education) வழங்க வேண்டு மென்ற பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது. மேல்நாடுகளில் மருத்துவத் துறையில் நடைபெறும் முன்னேற்றங்களைக் கண்டறிந்து வருவது, எளிதாக்க வேண்டுமென்ற பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

93. இரத்த சேமிப்பு நிலையங்களை ஆய்வு செய்யத் தனிக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் இந்த நிலையங் களைச் சீர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

94. கண்புரை சிகிச்சை (Cataract) அளிக்கும் திட்டத்தை குறிப்பிட்ட கால அளவில் செயல் படுத்த வேண்டுமென்ற பரிந் துரையைப் பின்பற்றி நான்கு மாவட்டங்களில் இந்த நோய் இல்லாமல் ஒரு நிலை ஏற்படுத்தும் செயல் திட்டம் நடை பெற்று வருகின்றது. நகர்ப் புறங்களில் குடிசை வாழ் மக்கள் நலனுக்காக பல்வேறு சுகாதார திட்டங்கள் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும்.

95. மாவட்டங்களில் மருத்துவம் மற்றும் சுகாதார திட்டங்கள் செம்மையாக ஒருங்கிணைந்த முறையில் செயல் படுத்த ஒரு இணை இயக்குநர் பதவி அமைக்க வேண்டுமென்ற பரிந்துரையை ஏற்றுக் கொண்டு இதனை வரும் ஆண்டில் செயல்படுத்துவோம். மாவட்டத் தலைமை மருத்துவமனை மற்றும் வட்ட அளவில் உள்ள மருத்துவமனைகளை மேம் படுத்தச் சிறப்புத் திட்டப் வகுக்க வேண்டுமென்ற பரிந்துரையின் அடிப்படையில், வரும் ஆண்டில் புதிய திட்டங்கள் சேர்க்கப் பட்டுள்ளன.

96. டாக்டர் எம். நடராசன் குழு பரிந்துரைத்த "விபத்து அவசர சிகிச்சை" என்னும் திட்டத்தை ஏற்றுக்கொண்டு ரூ.5.56 கோடி செலவில் இதனைச் செயல்படுத்துவது நகர்ப்புற வளர்ச்சி திட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளது.

97. சேலத்தில் அமைந்திருக்கவேண்டிய மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் தற்போது இதர மருத்துவக் கல்லூரிகளில் பயின்று வருகின்றார்கள். சேலத்திற்கு மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளது. இதனை ஏற்றுக்கொண்டு, வரும் ஆண்டிலிருந்து இக்கல்லூரி சேலத்திலிருந்தே செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

## குடிநீர்

98. அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர் வசதியை அளிப்பதற்கு இந்த அரசு அக்கறை காட்டி வருகிறது. குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை



10,323 எனக் கண்டு, நடப்பு ஆண்டில் எடுத்த முயற்சியின் காரணமாக, 5,905 இராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் இந்த வசதியை அளித்துள்ளோம். எஞ்சியுள்ள 4,418 இடங்களுக்கும் வரும் மே திங்கள் இறுதிக்குள் குடிநீர் வசதி அளிக்கப்பட்டு விடும். இதற்கென ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

99. அண்மையில் ஆந்திர மாநில முதல்வருடன் தெலுங்கு கங்கைத் திட்டப் பணியின் முன்னேற்றம் குறித்துக் கலந்து பேசியுள்ளேன். 1993 ஆம் ஆண்டு தொடக்கத்தில் சென்னை மாநகருக்கு இத்திட்டத்தின் மூலம் சுமார் 12,000 மில்லியன் கன அடி குடிநீர் வழங்குவதற்கு அனைத்துப் பணிகளும் முடிக்கி விடப்படுமென ஆந்திர முதல்வர் உறுதி அளித்துள்ளார். நடப்பு ஆண்டில் நமது பங்காக ஆந்திர மாநில அரசுக்கு ரூ. 45 கோடி கொடுத்துள்ளோம். வரும் ஆண்டில் மேலும் ரூ. 45 கோடி கொடுப்பதற்கு வரவு-செலவு திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகிக்கும் பணிக்கான உதவியாக ரூ. 505 கோடி கேட்டு உலக வங்கி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம், ஏனைய நிதி உதவி தரும் நிறுவனங்களை அணுகியுள்ளோம்.

100. இடைக்காலத்தில் சென்னை மாநகருக்கு வடக்கேயுள்ள குடிநீர் கிணறுகளில் உள்ள நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர வடிகால் வாரியத்திற்கு ரூ. 30 கோடி வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

101. சென்னை மாநகருக்கு மட்டுமல்லாமல் மற்றும் சில பெரிய நகரங்களுக்குக் குடிநீர் வழங்க, உலக வங்கியின் உதவி யுடன் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—துப்புரவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அண்மையில் தலைமைச் செயலரின் தலைமையில் அதிகாரிகளின் குழு அமெரிக்கா சென்று இத்திட்டத்தை மாற்றியமைப்பது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. இம்முயற்சியின் பலனாக ரூ. 300 கோடி செலவில் செயல்படுத்தப்படும் இத்திட்டம் சுமார் இத்திட்டம் முன்பிருந்தபடி மதுரை, கோவை, சேலம் ஆகிய நகரங்களுக்குக் குடிநீர் வழங்குவதுடன் மாற்றியமைக்கப்பட்ட வடிவில் கூடுதலாக பொள்ளாச்சி, மணப்பாறை, சங்கரநயினார்கோவில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய ஆறு நகரங் களுக்கும் குடிநீர் வழங்கும்.

140772 V 211 21 N 96

## வீட்டு வசதி

102. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடப்பு ஆண்டில் ரூ.97 கோடி செலவில் 18,800 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. வரும் ஆண்டில் இந்த வாரியம் ரூபாய் 117 கோடி செலவில் 20,800 வீடுகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளும்.

103. வரும் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகளைக் கணிசமாக விரிவுபடுத்துவதற்கு வகை செய்துள்ளோம். சென்னை மாநகரில் இந்த வாரியம் ஆயிரம் குடியிருப்புகள் கட்டி வருகின்றது. வரும் ஆண்டில் குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களுக்காக 12,000 அடுக்குமாடி குடியிருப்பு களைக் கட்டித்தரும் பணி எடுத்துக் கொள்ளப்படும். இப் பணி வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) உதவியுடன் ரூ. 50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் 32 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையில் குடிசைப் பகுதி சீரமைப்புத் திட்டம் (Slum Improvement Scheme) தொடர்ந்து செயல்படும்.

104. வீடுகளைத் தரம் உயர்த்தும் புதிய திட்டம் (Shelter Upgradation Programme) ஒன்றுக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது. இத்திட்டத்தின் மூலம் குடும்பம் ஒன்றுக்கு வீடு சீரமைப்புப் பணிகளுக்கு ரூ. 4,000 நிதி உதவி அளிக்கப்படும். இத்தொகையில் ரூ. 1,000 மானிய உதவியும் அடங்கும். இத் திட்டத்தின்கீழ், நகரப் பகுதிகளில் வரும் ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் பயனடையும்.

## நகர்ப் பகுதி வளர்ச்சி

105. ஒப்புநோக்குமிடத்து, கிராமப் பகுதிகளைவிட நகர்ப் பகுதிகள் பகட்டாகத் தோன்றினும், அங்கேயும் ஆயிரம் பிரச்சினைகள் முட்டி மோதிக் கொண்டு கிடக்கின்றன என்பதை எளிதில் உணரலாம். நகரங்களில் பல்வேறு நெருக்கடிகளைத் தவிர்க்க, தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் ரூ. 632.55 கோடி அளவில் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சென்னை, சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, ஈரோடு, கோவை, திருச்சி, மதுரை, திருப்பூர், வேலூர் ஆகிய நகரங்களும் அவற்றைச் சேர்ந்த புறநகர்ப் பகுதிகளும் பயனடைகின்றன. வரும் ஆண்டில் இத் திட்டத்திற்கென ரூ. 90.45 கோடி செலவு செய்ய உத்தேசிக் கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 20,000 குடும்பங்கள் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணியினால் பயன்பெறும். 11,000 மனைகள் வசதி வாய்ந்த சூழலுடன் அமைக்கப்படும்.

106. சென்னை ராயபுரத்தில் ரயில் பாதைமீது மேம்பாலப் பணி ரூ. 13.2 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்படும். இதனால், அந்தப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஓரளவு குறையும்.



107. மாநிலத்தில் உள்ள பல நகராட்சிகள், சிறிய, நடுத்தரத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். அண்மையில் நகர்ப்புற இன்றியமையாத அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் ஒன்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் (HUDCO) என்ற நிறுவனத்திடம் இருந்து மேலும் நிதி ஆதாரங்களைத் திரட்டி, நகராட்சிகளில் வளர்ச்சிப் பணிகளையும் திட்டங்களையும் நிறைவேற்றும். நகர—நாட்டுப்புற திட்ட நிதியை வலுப்படுத்தும் பொருட்டு, அந்த நிதிக்கு அரசு நீண்ட காலக் கடனாக வழங்கியிருந்த ரூபாய் 30 கோடியை மூலதன மானியமாக மாற்றித் தர முடிவு செய்துள்ளது. இதனால் சிறிய நகராட்சிகளும் பேரூராட்சிகளும் பலவகையான மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற இயலும்.

## சத்துணவு.

108. சத்துணவுத் திட்டத்தின் கீழ்பயன்பெறும் 85 இலட்சம் குழந்தைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு முட்டை வழங்குவதன் மூலமும், வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்து கொடுக்கப்படுவதன் மூலமும் இத்திட்டம் வலுப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென நடப்பாண்டில் ரூ. 173 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. வரும் ஆண்டில் இதனை ரூ. 195 கோடியாக உயர்த்தியுள்ளோம்.

109. சத்துணவுத் திட்டம் இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆறு மாதத்திலிருந்து மூன்று வயதுக்குள் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து திட்டம் பத்து மாவட்டங்களில் தனி மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விரு திட்டங்களையும் இணைத்து ஒரே மையத்தில் ஆறுமாதங்களுக்கு மேல் மூன்று வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தும் மூன்று வயதிலிருந்து ஆறு வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு சத்துணவும் கிடைக்கும் வகையில் புதிய ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும். உலக வங்கி உதவி யுடன் செயல்படுத்த இருக்கும் இந்தப் புதிய திட்டத்திற்கு வரும் ஐந்தாண்டுகளில் கூடுதல் செலவு ரூ. 350 கோடியாகும்.

## ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன்.

110. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்புகளில் ஊக்குவிப்பும் வசதிகளும் செய்து கொடுப் பதன் மூலம், சமூக, பொருளாதார துறையில் அவர்களை முன்னேற்றும் முயற்சி தொடர்கிறது.

111. வரவு-செலவு திட்டத்தில் ஆதிதிராவிடர்கள், பழங்குடி
மக்கள் நலனுக்காக ரூ. 90.53 கோடி ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்காகப்
புதிதாக 40 மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும். வரும்
ஆண்டில் ஆதிதிராவிடர்கள், வீட்டு மனைகளுக்கான ஒதுக்கீடு ரூ. 2.5
கோடியாக உயர்த்தப்பட்டு, அவர்களுக்கு 40,000 இலவச வீட்டு மனைகள்
அளிக்கப்படும்.

112. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்குத் தக்க
பயிற்சியும், வேலை வாய்ப்புக்கு மானியமும் சிறு தொழில்கள் தொடங்க
நிதி உதவியும் உள்ளடங்கிய ரூ. 25 கோடிக்கான சிறப்புத் திட்டம்
செயல்படுத்தப்படும். இத் திட்டத்தினால் சுமார் ஒரு இலட்சம் ஆதி
திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் பயன் பெறுவார்கள்.

113. ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள்
கட்டித் தரும் பெரும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 42,000
வீடுகள் கட்டி முடிக்கப்படும். வரும் ஆண்டில் 47,000 இலவச
வீடுகள் ரூ. 56 கோடி செலவில் கட்டித் தரும் பணி மேற்கொள்ளப்படும்.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட
வகுப்பினர், சீர் மரபினர் நலன்.

114. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மர
பினருக்கும் கல்வி, வேலைவாய்ப்புகள் பெறுவதில் சிறப்பு இட
ஒதுக்கீடாக 20 விழுக்காடு இவ்வரசு அளித்துள்ளதை மாண்புமிகு
உறுப்பினர்கள் நன்கறிவார்கள். இப்புதிய கொள்கை மிகவும்
பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர் மரபினருக்கும் கணிசமான
அளவுக்குப் பயன் தந்துள்ளது என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சி
யடைகிறேன். 1989 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியில்
சேர்க்கப்பட்ட மாணவர்களில் 187 பேர் மிகவும் பிற்படுத்தப்
பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆவர். ஆனால் அதற்கு
முந்தைய ஆண்டில் இவ்விரு வகுப்பினரிலிருந்து தெரிந்தெடுக்கப்
பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 68 மட்டுமேயாகும். இது
போல, 1989-ல் பொறியியல் கல்லூரிகளில் தெரிந்தெடுக்கப்பட்ட
மாணவர்களில் 685 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்,
சீர்மரபினர் ஆவர். அதற்கு முந்தைய ஆண்டில் இவ்விரு
வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 354 மட்டுமே
யாகும். மிகவும்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர்
நலனுக்காகத் தனி இயக்குநர் அலுவலகம் ஒன்று நடப்பாண்டில்
ஏற்படுத்தப்பட்டு, இவர்கள் நலனுக்காகப் பல திட்டங்களை
வகுத்துச் செயல்பட்டு வருகிறது.



115. வரும் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்
பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலனுக்காக மொத்த ஒதுக்
கீட்டினை ரூ. 30.70 கோடியாக குறிப்பிடத்தக்க அளவிற்கு
உயர்த்தியுள்ளோம். 1989-90 ஆம் ஆண்டில் செய்யப்
பட்டிருந்த ஒதுக்கீடான ரூ. 19.57 கோடியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில்
இது கணிசமான உயர்வாகும். வரும் ஆண்டில் 50 புதிய மாணவர்
இல்லங்கள் தொடங்கப்படும். இந்த மாணவர் இல்லங்களில்,
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர்
ஆகியோரைச் சேர்ந்த மாணவர்களுக்கு உரிய முன்னுரிமை
அளிக்கப்படும். புதிதாக 40 மாணவர் இல்லங்களுக்கு கட்டிடங்கள்
ரூ. 4 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

116. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர்
ஆகியோரைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வீட்டுமனை கையகப்
படுத்தி இலவசமாக வழங்குவதற்காக புதியதோர் திட்டத்திற்கு
முதற்கட்டமாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
(மேசையைத் தட்டும் ஒலி)

சிறுபான்மையோர் பாதுகாப்பு—நலன்.

117. இவ்வரசு மதம் மற்றும் மொழிச் சிறுபான்மையினரின்
பாதுகாப்புக்காக திரு. அப்துல் ஜபார் தலைமையில் பேராசிரியர் மரிய
நல்லுவை துணைத்தலைவராகக் கொண்டு மாநில சிறுபான்மையினர்
ஆணையம் ஒன்று அமைத்துள்ளது. மதம் மாறிய கிருத்துவ ஆதி
திராவிடர்களுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கு நிகராக அனைத்து
சலுகைகளும் இவ்வரசு முன்பே 1975-ஆம் ஆண்டில் வழங்கி
யுள்ளது. மேலும் அவர்களுக்கு ஆதி திராவிடர்களுக்கு
இணையாக சலுகைகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை
மத்திய அரசுக்கு இவ்வரசு பரிந்துரை செய்துள்ளது.
(மேசையைத் தட்டும் ஒலி).

118. சென்னையிலிருந்து நேரடியாக ஹஜ் செல்லக் கூடிய
வசதிகள் ஏற்பட்ட பின்பு சென்னையில் ஹஜ் செல்லும் பயணிகள்
தங்கும் வசதிக்கான தேவைகள் அதிகரித்துள்ளன. இதனை
யொட்டி, வரும் ஆண்டில் ஹஜ் பயணியர்கள் தங்குவதற்கு ஏற்ப
ஒரு பயணியர் இல்லம் சென்னையில் அமைக்கப்படும்.
(மேசையைத் தட்டும் ஒலி)

வேலை வாய்ப்பு

119. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்து
வதில் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடு
தான் முன்னணியில் இருந்து வருகிறது. நடப்பாண்டில், இத்திட்
டத்தின்கீழ் 847 இலட்சம் மனித நாட்களுக்கான வேலைவாய்ப்பு
ரூ. 186.49 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டது. மேலும்,
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இரண்டு
இலட்சம் நபர்களுக்கு சுயவேலை வாய்ப்புக்கான வசதிகள்
ஏற்படுத்தப்பட்டன.

120. கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில், கிராமப் பகுதிகளில் வாழும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை நான் அறிவித்திருந்தேன். இத்திட்டத்தின் கீழ், பத்தாவது வரை படித்த 25,000 பேர், மக்கள் நலப் பணியாளர்களாக தெரிந்தெடுக்கப்பட்டுப் பயிற்சி பெறத் தொடங்குகிறார்கள். இந்த மக்கள் நலப் பணியாளர் களில் ஆண்களும் பெண்களும் சம எண்ணிக்கையில் உள்ளனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 மதிப்பூதியம் வழங்கப் படும். இவர்கள் கிராமங்களில் பல்வேறு ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

121. இதேபோல், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பன்னிரண்டாவது வகுப்பு (பிளஸ் 2) தேர்வு பெற்ற 10,000 பேர், மக்கள் நலப் பணியாளர்களாக வரும் ஆண்டில் நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வழங்கப்படும். இந்தப் பத்தாயிரம் பேரில், 50 விழுக்காடு பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

### மகளிர் நலன்.

122. மகளிர் நல மறு மலர்ச்சிக்காக நடப்பு ஆண்டில் நம் அரசு பல முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மகளிருக்கென : அரசுப் பணிகள் உள்ளாட்சி மன்றங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பில் 30 விழுக்காடு ஒதுக்கப்பட்டுள்ளதும், உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்படும் இடங்களில் 30 விழுக்காடு மகளிருக்கென ஒதுக்கப்பட்டுள்ளதும், 1956 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளுக்குச் சொத்தில் சம உரிமை அளிக்கப்பட்டுள்ளதும், மிகவும் வறியவர்களாகவும், ஏழை நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு கல்லூரிப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி, ஏழைப் பெண் களுக்கு 5,000 ரூபாய் திருமண உதவி, மகப்பேறு நிதி உதவி கலப்புத் திருமணத் தம்பதிகளை ஊக்குவிக்க நிதி உதவி, விதவை மறுமணத்தை ஊக்கப்படுத்தும் வகையில் நிதி உதவி போன்ற திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

123. அனைத்து நாடுகள் வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் ரூ. 45.8 கோடி செலவில், மகளிர் மேம்பாட்டுக்காக விவசாயம், பட்டுப்பூச்சி வளர்ப்பு மற்றும் சிறு தொழில்கள் அடங்கிய தொகுப்புத் திட்டம் ஒன்றை நடப்பாண்டில் மேற் கொண்டுள்ளோம். இத்திட்டத்தின் மூலம் ஐந்தாண்டுகளில் சேலம், தர்மபுரி தென் ஆற்காடு மாவட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். வரும் ஆண்டு களில் இதில் விளையும் அனுபவத்தின் அடிப்படையில், இத் திட்டத்தை மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த எண்ணியுள்ளோம்.



124. இந்த நேரத்தில் ஒரு பயங்கர வேதனையை வெளி யிடவும், அரசு அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கவிருக் கிறது என்ற செய்தியைக் கூறவும் என் மனம் கலங்குகிறது. சிறுமியர் ஆண்டென இந்த ஆண்டைக் கொண்டாடுகிறோம். தாயைப் போற்றும் இத்தமிழ் நிலத்தில் ஒரு சில மாவட்டங்களில் பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால் அதனை உடனே கொன்றுவிடும் கொடுமை நடைபெறுவதாகச் செய்திகள் வருகின்றன. அந்தக் கொலைகளைச் செய்வோர், அதற்கு உடந்தையாக இருப்போர் கடுமையான முறையில் தண்டிக்கப்பட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமென்பதுடன், அப்பகுதி பெண் குழந்தைகளை வளர்த்துக் காத்திட அரசு ஏற்பாடுகளைச் செய்யும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

### தொழிலாளர் நலன்.

125. தொழிலாளர் நலனுக்காக இவ்வரசு பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. மூடப்பட்டிருந்த நூற்பு ஆலைகளில் 9 ஆலைகள் கடந்த ஆண்டு திறக்கப்பட்டன. மேலும் 6 நூற்பு ஆலைகளை திறந்து இவ்வரசு எடுத்து நடத்தும் எண்ணத்தை முன்பிருந்த மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இதில் 4 ஆலைகளை சீர்படுத்துவதற்கு தொழிலியல் மற்றும் நிதியியல் கட்டமைப்பு வாரியத்தின் (B.I.F.R.) மூலம் பரிசீலனை நடத்தப்படுகிறது. மீதம் உள்ள 2 ஆலைகளைப் பொறுத்தவரை, விவரமான ஆய்வு அறிக்கை பெற்று மத்திய அரசு முடிவு எடுக்கும். இதனை துரிதப்படுத்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்வோம்.

126. மூடிக்கிடந்திருந்த மெட்டல் பாக்ஸ் நிறுவனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிக்கலான நிலையில் இருந்த ஸ்டேண்டர்டு மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தை சுமுகமான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி ஜூன் திங்களில் மீண்டும் செயல்பட உறுதி யான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

127. தொழிலாளரின் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்ட இவ்வரசு, மூடப்பட்ட ஆலைகளில் பணியாற்றிய 16,957 தொழிலாளர்களுக்கு இதுவரை ரூ. 63.91 லட்சம் உதவித் தொகையாக வழங்கி உள்ளது.

128. நடப்பாண்டில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், பீடித் தொழில், நெசவு, தனியார் மருத்துவமனைகள் போன்ற அமைப்பற்ற தொழில்களில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திரைப்படத் தொழிலிலுள்ள ஊழியர்களின் நலனைக் கருதி விவரமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, ஒரு சுமுகமான நிலை உருவாக்கப்பட்டது.

அரசுப் பணியாளர்கள் நலன்.

129. இந்த அரசு கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் வாக்குறுதி அளித்தவாறு, மாநில அரசின் அலுவலர்களுக்கு மத்திய அரசு ஊதிய விகிதங்களை அளித்ததைத் தொடர்ந்து வரப்பெற்ற பல முறையீடுகள், சார்புரைகள் விரைவாகப் பரிசீலனை செய்யப்பட்டு இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவை, பலவகையினருக்கு ஊதிய விகிதங்களைத் தாராளமாக்குவதாகவே இருந்தன.

130. அரசுப் பணியாளர்கள் தேர்வுநிலை பதவித் தகுதி, சிறப்பு நிலைப் பதவித் தகுதி ஆகியவை தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளனர். தேர்வு நிலைப் பதவித் தரமும், சிறப்பு நிலைப் பதவித் தரமும் முதன்முதலில் 1970-ல் இந்த அரசால் கொண்டு வரப்பட்டது. இத்தகைய பதவித் தரங்கள் மத்திய அரசு ஊதிய விகிதங்களில் இல்லை. எனினும், மாநில அரசு அலுவலர்களின் கோரிக்கையை அனுதாபத்துடன் பரிசிலித்து, முதுநிலை அளவில் உள்ள பணியாளர்களுக்கு நலன் அளிக்கும் வகையில் இவ்விரு வகைப் பதவித் தகுதிகளையும் மீண்டும் ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். இதற்கு ஆண்டு ஒன்றிற்குக் கூடுதலாக ரூ. 10 கோடி செலவாகும். ரூ. 2,500-ஐ விடக் குறைவான தொடக்கச் சம்பளம் பெறும் சம்பள விகிதங்களில் உள்ள அனைத்து வகைப் பணியாளர்களுக்கும் இது பொருந்தும்.

131. மானிய உதவிபெறும் பள்ளி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மாதம் ரூ. 15 வீதம் மருத்துவப் படி வழங்க வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்துள்ளார்கள். இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நடவடிக்கையின் மூலம், 1.25 இலட்சம் ஆசிரியர்களும் ஆசிரியர் ஓய்வூதியம் பெறுபவர்களும் பயன்பெறுவார்கள் இதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2.25 கோடி செலவு ஏற்படும்.



பேருந்துப் போக்குவரத்திற்குத் தேசியமயத் திட்டம்.

132. கழக அரசு 1973ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் கையகப்படுத்தும் சட்டம் ஒன்றினை இயற்றி, மாவட்ட வாரியாகப் படிப்படியாகத் தனியார் போக்குவரத்தை அரசுடைமை ஆக்கிட முனைந்து, முதற்கண் நீலகிரி மாவட்டத்தில் பயணிப் பேருந்து போக்குவரத்தை 1973 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று அரசுடைமை ஆக்கியது. இந்த பஸ்கள் தேசிய உடைமைச் சட்டத்தை எதிர்த்து 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, உச்ச நீதிமன்றம் வரை வழக்கு சென்று இறுதியாக 1983ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ஆம் தேதி—கழக அரசு கொண்டு வந்த பஸ்கள் தேசிய மயச் சட்டம் செல்லத் தக்கதென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால், அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இடைக்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமின்றி, 1973ஆம் ஆண்டு கழக அரசு கொண்டு வந்த தேசிய மயச் சட்டம் வலிவிழந்து போகின்ற அளவிற்குப் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

133. மீண்டும் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 1989ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29ஆம் நாளில் இந்தச் சட்டம் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு—உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மீண்டும் பேருந்துகளை முழுமையாகத் தேசியமயமாக்கும் சட்டத்தை முதலில் குறைந்த அளவிலான பேருந்துகள் இயக்கப்படும் மாவட்டத்திலிருந்து தொடங்கி, படிப்படியாக ஏறு வரிசையில் மற்ற மாவட்டங்களுக்கு விரிவடையச் செய்து, பத்தாண்டு காலத்திற்குள் பஸ்கள் தேசிய மயத் திட்டத்தை நிறைவு செய்வதென்று முடிவு செய்யப்பட்டு அதை அவசரச் சட்டமாக வெளியிட முன் அனுமதி கோரி மத்திய அரசிற்கு 1989ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28ஆம் நாளன்று கடிதம் எழுதப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதுநாள் வரை இச்சட்டத்திற்கு முன் அனுமதி வராத காரணத்தால் இதனை அவசரச் சட்டமாக கொண்டுவர முடியவில்லை. எனவே, 1989 ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் நாள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவுப்படி அந்தச் சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படுமெனத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நிர்வாகம்.

134. நிர்வாக வசதிக்காக மாவட்டங்களையோ வட்டங்களையோ பிரிப்பதற்கு மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி முடிவுறும் வரையில் முயற்சிகள் மேற்கொள்ள முடியாத நிலையில்

தடை இருக்கிற காரணத்தால், அதுவரையில் இடைக்காலத்தில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் இருவராகவும் அதேபோல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலர்கள் இருவராகவும் நிர்வாக வசதிக்காகப் பணிபுரிவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

135. ஆளுநர் உரையில் அறிவித்துள்ளபடி, நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட லோக்பால் சட்டமுன்வடிவு அடிப்படையில் இந்தக் கூட்டத் தொடரில் முதலமைச்சர், அமைச்சர்கள் உட்பட பதவி வகிப்பவர்களுக்கு எதிரான தவறான நடத்தை குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க வகை செய்யும் சட்டம் கொண்டு வரப்படும்.

## நிலச் சீர்திருத்தங்கள்.

136, கழக அரசு 1971 ஆம் ஆண்டு நில உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் எனச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியதைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டத்தில் வடபாதிமங்கலம் பகுதியில் சுமார் 4,051 ஏக்கர் நிலம் நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டு தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. ஆனால், இந்த நிறுவனம் பிறகு சரியான முறையில் செயல்படாததால் மூடப்பட்டது. அதன் பின்பு அந்த விளைச்சல் நிலங்கள் தரிசாக விடப்பட்டன. மேலும், இந் நிலங்களை வங்கிகளின் உதவியுடன் அதிக சந்தை விலையான ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10,000 என்ற மதிப்பில் வழங்கிட 1978-ல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் திட்டமிடப்பட்டது. இந்த அரசு அந்த விலையைக் குறைத்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,600 என்ற விலையில் மேற்சொன்ன நிலங்களில் பயிரிடத் தகுதியான 3,651 ஏக்கர் நிலங்களை, அந்தப் பகுதியைச் சேர்ந்த நிலமற்ற ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட ஏழை விவசாயிகள் 4,803 பேருக்கு ஏப்ரல் திங்களில் பட்டா வழங்கிட இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

137. தேர்தல் அறிக்கையில் பெருந் தலைவர் காமராசர் ஆட்சியிலும், கழக ஆட்சியிலும் நிறைவேற்றப்பட்ட நில உச்சவரம்பு சட்டத்தை மீறி பினாமி நிலம் வைத்திருப்போரிடமிருந்து அந்த நிலத்தைக் கைப்பற்றி நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கும் பினாமி நில ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருந்தோம். முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா நில உச்சவரம்பு கட்டுவதற்கான முதல் சட்டமாக 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் எனத் தேதியிட்ட, தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உச்ச வரம்பு) சட்டம் 1961, அமுல்படுத்தப்பட்டது. உச்சவரம்பு சட்டத்தை எதிர்நோக்கி, அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் உச்சவரம்புக்கு உட்படக்கூடிய பெரு நிலக்காரர்கள்



பலர் தங்களது நிலங்களைப் பல்வேறு அறக்கட்டளைகளுக்கும் நபர்களுக்கும் பினாமியாக மாற்றியுள்ளார்கள் என்பதும், ஆனால், பெருமளவுக்கு அந்த நிலங்கள் அவர்களுடைய அனுபவத்திலேயே தொடர்ந்து இருக்கின்றன என்பதும் உண்மையான நிலையாகும். இந்தச் சூழ்நிலையில், 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் வரை பினாமியாக மாற்றப்பட்ட நிலங்களின் விவரங்களை ஆராய்ந்து, இப்புதிய சட்டத்திற்கு புறம்பான மாற்றங்கள் செல்லாதென்று அறிவித்து, சம்பந்தப்பட்ட நிலங்கள் அரசால் முறைப்படி எடுத்துக் கொள்ளப்பட்டு அந்த நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிக்க ஒரு புதிய நிலச்சீர்திருத்தச் சட்டத்தை இந்தப் பேரவைக் கூட்டத் தொடரில் கொண்டுவர முடிவெடுத்துள்ளோம்.
(மேசையைத் தட்டும் ஒலி.)

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

138. நடப்பு ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும்போது 1989–90 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 325.07 கோடி பற்றாக்குறையாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. தற்போது திருத்திய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருவாய்க் கணக்கில் ரூ. 4,044.24 கோடி வருவாயும், ரூ. 4,562.80 கோடி செலவாகவும் மதிப்பிடப்பட்டு, வருவாய்க் கணக்கில் ரூ. 518.56 கோடி அளவிற்குப் பற்றாக்குறை உள்ளது. மூலதனச் செலவுகள் மற்றும் இதர கணக்குகளின் விளைவுகளையும் எடுத்துக்கொண்டு, நடப்பு ஆண்டின் இறுதியில் மொத்தப் பற்றாக்குறை ரூ. 160.74 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டதனாலும் வேறு சில நிதி ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கைகளினாலும் இறுதிப் பற்றாக்குறை ரூ. 325.07 கோடி இல்லாமல், ரூ. 160.74 கோடி அளவுக்குக் குறைக்கப்படும் என்று தற்போது எதிர்பார்க்கிறோம். இதற்கு காரணம் அரசு கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டவும், வரி வசூலை செம்மைப்படுத்தவும், செலவுகளைக் கட்டுப்படுத்தவும் எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளேயாகும்.

139. வரும் ஆண்டுக்கான, அதாவது 1990-91 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் ரூ. 4,397.46 கோடி வருவாயும், ரூ. 4,814.09 கோடி செலவும் மதிப்பிடப்பட்டு, வருவாய் கணக்கில் ரூ. 416.63 கோடி பற்றாக் குறையாக அமைகிறது. இதர கணக்குகளையும் சேர்த்து நோக்கும்போது, 1990-91-ல் மட்டுமே ரூ. 349.36 கோடி துண்டு விழும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் நடப்பு ஆண்டின் இறுதியில் இருக்கும் ரூ. 160.74 கோடி பற்றாக் குறையும் சேர்ந்து, 1990–91 முடிவில் ரூ. 510.10 கோடி

மொத்த பற்றாக்குறையாக இருக்கும். அண்மையில் மதுவிலக்கு ஏற்பாடுகளிலும், ஆயத்தீர்வையிலும் நாம் எடுத்துள்ள முடிவு களின் காரணமாக கூடுதல் வருவாயாக ரூ. 180 கோடி கிட்டும் என்று எதிர்பார்ப்பதால், அந்த அளவுக்கு மொத்தப் பற்றாக் குறை ஈடுசெய்யப்பட்டு, ரூ. 330.10 கோடியளவுக்குக் கொண்டு வரப்படும். இந்த அளவுக்கு நிற்கும் பற்றாக்குறையைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

140. அண்மையில் மத்திய திட்டக் குழுவுடன் நடந்த பேச்சு வார்த்தைகளில், வரும் ஆண்டில் திட்டப் பணிகளுக்காகத் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு கொடுக்கும் உதவித்தொகை அதிகரிக்க வேண்டுமென்றும், பொதுக் கடன்கள் மூலமாக நமது அரசும், அரசு நிறுவனங்களும் எழுப்பக் கூடிய தொகைகள் உயர்த்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளோம். வரும் ஆண்டிலாவது, மாநிலங்களின் நிதி ஆதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு மத்திய அரசு சரக்குகள் அனுப்புவதன் மீதான வரியைக் (Consignment Tax) கொண்டு வரும் என்று நம்பு கிறோம். வழக்கமாக ஏற்படும் வளர்ச்சியின் காரணமாக, மத்திய வரிகளிலிருந்து நமக்குப் பங்காக கிடைக்கும் வர வினங்களும் ஓரளவுக்கு அதிகரிக்கலாம். அரசுக்கு வரவேண்டிய வரிகளை வசூலிப்பதிலும், அரசின் செலவுகளைக் கட்டுப் படுத்துவதிலும் தொடர்ந்து கண்டிப்பாக இருப்போம். இவ் வகையான பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக பற்றாக் குறை கூடுமான அளவுக்கு ஈடுசெய்யப்பட்டாலும், வரும் ஆண்டின் இறுதியில் நிகரமாகத் தென்படும் பற்றாக்குறையின் அளவு கவலையளிக்கும் ஒன்றாகவே இருக்கும். அதனை உரிய முறைகளில் சரிக்கட்டும் பொறுப்பு தவிர்க்க முடியாத தாகும்.

141. கூடுதல் நிதியாதாரங்களைத் திரட்டும் முயற்சிகளில் சாதாரண மக்களின் மீது சுமை விழக் கூடாது, அவர்களுக்கு இயன்ற அளவுக்கு சலுகைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்பதே நமது கொள்கையாகும். அத்துடன், விற்பனை வரி கொடுக்கும் இலட்சக்கணக்கான வணிகர்களின் நலத்தையும் கருத்தில் கொண்டு சில முக்கியமான சீர்திருத்தங்களை கொண்டு வர முடிவு எடுத்துள்ளோம்.

## வரிகள்

142. தமிழ் நாட்டின் விற்பனை வரி அமைப்பில் 193 பொருட்கள் ஒரு முனை வரிக்கும் ஏனைய வரி விதிக்கக்கூடிய பொருட்கள் ஒவ்வொரு கட்டத்திலும் 5 சதவீத பலமுனை ரிக்கும் உட்பட்டு இருக்கின்றன. வியாபாரிகள் ஒரு முனை



வரி முறையையே விரும்புகின்றனர். இதற்கிணங்க, நமது அரசும் அவ்வப்போது பொருட்களைப் பலமுனை வரியிலிருந்து ஒருமுனை வரிக்கு மாற்றி வந்துள்ளது.

143. வரும் ஆண்டிலிருந்து, விற்பனை வரி அமைப்பில் ஒரு அடிப்படைச் சீர்திருத்தமாக, இனி எல்லா பொருட்கள் மீதும் ஒரு முனை வரியே விதிக்கப்படுமென்றும், பலமுனை வரி ஏற்பாடு அறவே நீக்கப்படுமென்றும் முடிவு செய்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி.) பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட் களின் மீது பொதுவாக இரண்டு கட்டங்களில் வரி விதிக்கப் படுவதால், அவை 10 சதவீத வரிச்சுமையைத் தாங்க வேண்டி இருக்கிறது. எனவே குறிப்பிட்ட ஒரு முனை வரி விகிதங் களுக்கும், வரி விலக்குக்கும் உட்படாத எஞ்சிய எல்லாப்பொருட் களுக்கும், அதாவது தற்போது பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட்கள் அனைத்துக்கும், இனி ஒருமுனையில் 8 சதவீதம் மட்டுமே வரி விதிக்கப்படும். பலமுனை வரி முறையில் தற்போது ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மொத்த விற்பனை அளவுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்தச் சலுகை மேலே கூறப்பட்ட எஞ்சிய பொருட்களுக்குத் தொடரும். இந்த மாறுதலினால் நுகர்வோருக்கு வரிப்பளுவும், வணிகர் களுக்கு சிரமமும் குறையும்,

144. தற்போது பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட்களின் தயாரிப்பாளர்களுக்கு மூலப்பொருள் கொள்முதலில் வரிச் சலுகை ஏதும் அளிக்கப்படுவதில்லை. அனைத்துப் பொருட் களையும் ஒருமுனை வரியாக மாற்றும்பொழுது இவர்களுக்கும் மூலப்பொருட்கள் மீதான சலுகை வரி கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

145. தற்போது பலமுனை வரிக்குட்பட்ட குறிப்பிட்ட சில பொருட்களுக்கு இனிமேல் விதிக்க இருக்கின்ற ஒரு முனை வரி பின் வருமாறு அமையும்:—

| வரிசை எண். | பொருட்களின் பெயர். | வரி விகிதம். |
|---|---|---|
| 1 | அலுமினியப் பாத்திரங்கள் | 4 |
| 2 | பித்தளை, செம்புப் பாத்திரங்கள். | 5 |
| 3 | ரொட்டி, பிஸ்கட் போன்றவை (டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாதது. | 5 |
| 4 | தங்கம், வெள்ளியால் செய்த அணிகலன்கள், பொருட்கள் | 4 |
| 5 | காலணிகள் (டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாதது) | 5 |
| 6 | ஏலக்காய் | 3 |

146. பின்வரும் பொருட்களுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்
படும்:

* நேரடியாக மக்கள் நுகரும் கரும்புக்கும், குறிப்பிட்ட
நாட்டு மருந்துகள் 10-க்கு (வாய் விளங்கம், பூமாங்கிழங்கு,
நெருஞ்சி, தாதரிப்பூ, அதிவிடயம், மாச்சக்காய், மதனகாமப்பூ,
வெள்ளிலோத்திரம், நிலவாகை, சாரணவேர் இவைகளுக்கு
எல்லாம்) விற்பனை வரி அறவே அகற்றப்படும்.

* மிளகாய், புளி, மிளகு, வெல்லம், மஞ்சள், மல்லி, சீரகம்,
சியக்காய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களுக்கு தற்போது
விதிக்கப்படும் 8 சதவீத வரி 6 சதவீதமாக குறைக்கப்படும்.
(மேசையைத் தட்டும் ஒலி)

* கால்நடைகளால் இழுக்கப்படும் மாட்டு வண்டிகள்,
குதிரை வண்டிகள் போன்ற வண்டிகளின் டயர்களுக்கும், டியூப்
களுக்கும் தற்போது விதிக்கப்படுகின்ற 8 சதவீத வரி 4 சதவீத
மாக குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

* டிராக்டர்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் மீது
தற்போது விதிக்கப்படுகின்ற 9 சதவீத வரி 4 சதவீதமாக
குறைக்கப்படும்.

* கைப் பம்புகளுக்குத் தற்போது உள்ள 8 சதவீத வரி 4
சதவீதமாக குறைக்கப்படும.

* செங்கற்கள் மீது தற்போது விதிக்கப்படும் 8 சதவீத வரி
4 சதவீதமாகவும், சாதாரண ஓடுகள் மீது தற்போது விதிக்கப்
படும் 5 சதவீத வரி 4 சதவீதமாகவும் குறைக்கப்படும்.

* ரப்பர் கலந்த நார்ப் பொருட்களுக்கு வரி 5 சதவீதத்தி
லிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

147. தற்போது தேங்காய் கொப்பரைக்கு உள்ள வரி 3
சதவீதமாகவும், எண்ணெய் தயாரிக்கும் வணிகர்களுக்கு விற்கப்
படும் தேங்காயின் மீதான வரி 5 சதவீதமாகவும் உள்ளது. இவை
இரண்டும் இனிமேல் 4 சதவீத வரிக்கு கொண்டு வரப்படும்.
மக்கள் நேரிடையாக வாங்கும் தேங்காய்க்கு வரிவிலக்கு
தொடரும்.

148. அண்டை மாநிலங்களில் இருக்கும் வரி விகிதங்களை
ஒப்பிட்டுப் பார்த்தும், சாதாரண மக்களைப் பாதிக்காதவாறு
நிதியாதாரங்களைப் பெருக்க வேண்டியிருப்பதாலும், ஒரு சில
பொருட்களுக்கு ஓரளவுக்கு வரிகளை உயர்த்தமுடிவு செய்துள்
ளோம். அவை பின்வருமாறு:

* பெட்ரோலியப் பொருட்களுக்கு (Petroleum Product)
தற்போது விதிக்கப்பட்டுவரும்கொள்முதல் ... 4சதவீதத்திலிருந்து



5 சதவீதமாக உயர்த்தப்படும். இதனால் மாநிலத்துக்குள் இந்தப்
பொருட்களைப் பயன்படுத்துவோருக்கு பாதிப்பு இராது.
பெட்ரோல் மற்றும் டீசல் மீது உள்ள விற்பனை வரியில்,
எவ்விதமான மாறுதலும் இல்லை.

* கோதுமையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஆட்டா,
ரவா, மைதா, சுஜ்ஜி போன்ற பொருட்களுக்கு 2 சதவீதத்தி
லிருந்து 4 சதவீதமாக வரி உயர்த்தப்படும். கோதுமைக்கு உள்ள
வரி விலக்கு தொடரும்.

* மெத்தை போன்றவை தயாரிக்கப் பயன்படுத்தப்படும்
பருத்திக் கழிவிற்கும், இயந்திரங்கள் துடைப்பதற்கு உபயோகப்
படுத்தப்படும் பருத்தி நூல் கழிவு (cotton waste and cotton yarn
waste) ஆகியவை மேல் இருக்கும் வரி 4 சதவீதத்திலிருந்து 6
சதவீதமாக உயர்த்தப்படும்.

* பச்சைத் தோல்களின் (Raw hides and skins) மீது தற்
போது 2 சதவீத வரி விதிக்கப்படுகிறது. ஆனால், பதனிடப்பட்ட
தோல்களுக்கும் (Dressed sides and skins) ஒரு சதவீதமே விதிக்
கப்படுகின்றது. இதனால், வரி விதிக்கப்படும் முறைகளில்
சங்கடங்களும் சர்ச்சைகளும் ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்க்க
இரண்டு வகைத் தோல்களுக்கும் 2 சதவீத வரி விதிக்கப்படும்.

* புதிதாக விற்பனைக்கு வரவிருக்கும் உள்நாட்டு மலிவு
மதுவின் (country liquor) மீது 25 சதவீத ஒருமுனை வரி விதிக்கப்
படும்.

* மின்னணு டெலிபிரிண்டர்கள் மற்றும் அதன் பாகங்கள்
மீது விதிக்கப்படும் 15 சதவீதவரி 10 சதவீதமாக குறைக்கப்படும்.
ஏனைய எல்லா மின்னணு பொருட்களுக்கும் ஒரே சீராக 4
சதவீத வரி விதிக்கப்படும். அவ்வாறே தொலைக்காட்சிப் பெட்டி
களுக்கு விதிக்கப்படும் வரியும் 4 சதவீதமாக இருக்கும்.

149. கடந்த சட்டசபைக் கூட்டத்தில் பல உறுப்பினர்கள்
மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அமைப்புகளின் நிதி
ஆதாரங்கள் கவலைக்கிடமாக உள்ளனவென்றும் இந்த நிலையைச்
சமாளிக்க வழிவகைகள் செய்வது அவசியமும் அவசரமும்
ஆகுமென்றும் எடுத்துக் கூறினர். இந்த நோக்கத்துடன்
ஓரளவுக்கு விற்பனை வரியின் மீது விதிக்கப்படும் மேல்வரியை
உயர்த்த முன் வந்துள்ளோம். தற்போது மதுரை, கோவை
மாநகராட்சி எல்லைகளுக்குள்ளும், சிறப்பு நிலை நகராட்சி
எல்லைகளுக்குள்ளும் விதிக்கப்படும் 10 சதவீதமேல்வரி (Surcharge)
12 சதவீதமாக உயர்த்தப்படும். ஏனைய நகராட்சி
களிலும், பேரூராட்சிகளிலும், நகரியங்களிலும் விதிக்கப்படும்
சதவீத மேல்வரி 10 சதவீதமாக உயர்த்தப்படும். ஊராட்சிகளில்

விதிக்கப்பட்டுவரும் 8 சதவீத மேல்வரியில் எந்தவித மான மாற்றமும் இல்லை. சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள். நகரியங்களில் விதிக்கப்படும் மேல் வரியிலிருந்து கிட்டும் வருவாயை இதுவரை அரசே அனுபவித்து வந்துள்ளது. இனி, இந்த மேல்வரி வருவாயில் 20 சதவீதம் மேற்கண்ட அமைப்புகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

150. சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், தற்போது 10 சதவீதம் மேல்வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்த மேல்வரி 15 சதவீதமாக உயர்த்தப்படும். மேல்வரி வருவாயில் தற்போது 32.5 சதவீதம் மானியமாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்படுகிறது. இனி இந்தத் தொகை 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இதனால் சென்னை மாநகராட்சிக்கு வரும் ஆண்டில் கூடுதலாக ரூபாய் 12.5 கோடி கிடைக்க வழி வகை செய்துள்ளோம்.

151. கூடுதல் விற்பனை வரி, வரிவிதிப்பிற்குள்ளடங்கிய ஆண்டு விற்பனை அளவு ஒரு கோடிக்கு மேலாக இருந்தால், 2 சதவீதமாக இருக்கிறது. இனியும் 5 கோடி விற்பனை அளவு வரை இந்த வரி விகிதத்தில் மாறுதல் எதுவும் இருக்காது. ரூபாய் 5 கோடிக்கு மேல் 10 கோடி விற்பனை அளவு வரை கூடுதல் விற்பனை வரி விகிதம் 2.25 சதவீதமாகவும், ரூபாய் 10 கோடிக்கு மேல் உள்ள விற்பனை அளவுக்கு 2.5 சதவீதமாகவும் உயர்த்தப்படும். ஒரு சில பெரிய நிறுவனங்கள் மட்டுமே இந்தப் புதிய வரி விகிதங்களின்கீழ் கொண்டுவரப்படும் என்பதும், இந்த வரியினால் நுகர்வோர் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

152. தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளவாறு வணிகர் நல வாரியத்தை அமைத்துள்ளோம். வரி விதிப்பு முறைகளினால் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படும் தொல்லைகளை நீக்கிடச் சில மாறுதல்களைக் கொண்டுவர முற்பட்டுள்ளோம். ஆண்டுக்கு ரூபாய் 5 இலட்சமும் அதற்குக்கீழும் உள்ள மொத்த விற்பனை அளவுக்கு, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, "முடிவுற்றதாகக் கருதப்படும் வரி விதிப்பு" முறை (Deemed assessments) கடைப்பிடிக்கபபடும். இந்த வரையறையில் அடங்கிய வியாபாரிகள் விரிவான கணக்குகளைக் கொடுக்க வேண்டிய அவசியம் நீக்கப்பட்டு அவர்களாலேயே படிவத்தில் கொடுக்கப்படும் விற்பனை வரித் தொகையை விற்பனை வரி நிர்வாகம் தணிக்கை செய்யாமல் ஏற்றுக்கொள்ளும். இவ்வாறு கொடுக்கப்படும்



மதிப்பீடுகளின் உண்மை நிலை அறிய, 5 அல்லது 10 சதவீதம் அளவுக்கு மட்டுமே இங்கொன்றும் அங்கொன்றுமான மாதிரி அடிப்படையில் (Random Sample) விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த மாற்றத்தினால் 40,000 வியாபாரிகள் பயன் பெறுவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த புதிய முறையை வரவேற்று அதைச் செயல் படுத்துவதில் வணிகப் பெருமக்கள் அரசுக்கு முழு ஆதரவை அளிப்பார்கள் என நம்புகிறேன்.

153. தமிழ்நாட்டிலுள்ள சொத்துக்களின் உரிமம் மாற்றும் பொழுது சட்டப்படி முத்திரைத்தாள் வரி கட்ட வேண்டிய நிலை இருக்கின்றது. இம்மாநிலத்திற்குச் சேர வேண்டிய இவ்வரியைக் கட்டாமல் இருக்கச் சிலர் இதர மாநிலங்களில், தமிழ்நாட்டில் ஏற்படும் சொத்து மாற்றங்களைப் பதிவு செய்து முத்திரைத் தாள் வரியை அந்த மாநிலத்தில் கட்டி வருகின்றார்கள். இதனைத் தவிர்க்கும் பொருட்டு, இந்திய முத்திரைச் சட்டத் திற்கு சட்டத்திருத்தம் மூலம் முத்திரைத்தாள் வரி ஒன்றை இக் கூட்டத்தொடரில் கொண்டு வர இருக்கின்றோம். இந்தத் திருத்தத்தினால் தமிழ்நாட்டிலுள்ள சொத்து மாற்றங்கள் பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டால், அத்தகைய பதிவு பத்திரங்களின் நகல் தமிழ்நாட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டு மென்றும், அப்போது நம்முடைய மாநிலத்தின் வரி விகிதத்திற்கும் பதிவுசெய்யப்பட்ட மாநிலத்தில் கொடுக்கப்பட்ட வரிக்கும் உள்ள வித்தியாசம் கட்டப்பட வேண்டுமென்றும் முறை ஏற்படுத்தப் படும். இதனால் வரி ஏய்ப்புக்குத் தற்போதுள்ள வாய்ப்பு அகற்றப்படும்.

154. இந்த நிதிநிலை அறிக்கையில் புது சாலைகளும், பாலங் களும் அமைக்கவும், சாலைகளைப் பராமரிக்கவும் கணிசமான அளவுக்கு ஒதுக்கீடுகள் உயர்த்தப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில், சாலைகளை உபயோகிக்கும் சரக்கு வாகனங் களுக்கும் (Goods Vehicles), ஊர்திகளுக்கும் போடப்படும் வரிகள் ஓரளவுக்கு உயர்த்துவது தேவையும் நியாயமுமாகிறது.

155. தற்போது சரக்கு வாகனங்களின் மீதான வரிகள் வாடகைக்கு ஓடும் வாகனங்கள், ஏனைய வாகனங்கள் என்று, இரண்டாகப்பிரிக்கப்பட்டுவிதிக்கப்படுகின்றன. புதிதாகக் கொண்டு வரப்பட்ட 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்திலும், தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விதிகள் 1989 அடிப்படையிலும், இவ்விரண்டு பிரிவுகளும் இணைக்கப்பட்டு, வாகனங் களுடைய கனத்தின் அடிப்படையில் வகை செய்யப்படுகின்றது. இதனை ஒட்டி வரி விகிதங்களையும் முறைப்படுத்தி ஓரளவுக்கு உயர்த்தியுள்ளோம்.

156. பேருந்துகளைப் பொறுத்த வரையில் காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு போடப்படும் வரி பின்வருமாறு மாற்றப்படும்.

| வரிசை எண். | ஊர்திகளின் வகைகள். | தற்போதைய காலாண்டுக்கு வரி இருக்கை ஒன்றுக்கு | உயர்த்தக் கருதியுள்ள காலாண்டுக்கு வரி இருக்கை ஒன்றுக்கு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. | (4) ரூ. |
| 1. | சென்னையைத் தவிர்த்து மற்ற நகரங்களில் ஓடிக் கொண்டிருக்கும் நகரப் பேருந்துகள். | 200 | 230 |
| 2. | விரைவுப் பேருந்துகள். | 220 + மேல்வரி ரூ. 40. | 250 + மேல்வரி ரூ. 40. |
| 3. | விரைவுப் பேருந்துகள் அல்லாத பிற பேருந்துகள் | 245 + மேல்வரி ரூ. 35. | 275 + மேல்வரி ரூ. 35. |

157. பயணிகளின் இருக்கைகள் அடிப்படையில் விதிக்கப்படு கின்ற, ''ஆம்னி பஸ்'' என்று அழைக்கப்படும் ஒப்பந்த ஊர்திகள் மீது வரி, காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 500-லிருந்து ரூ. 2,000 என்று மாற்றியமைக்கப்படும்.

158. தனியார் தொழில் வாகனங்களுக்கு (Private Service Vehicles) தற்போது காலாண்டுக்கு வாகனம் ஒன்றுக்கு ரூ. 150 ஆக வரி விதிக்கப்பட்டு வருகிறது. இது காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 50 ஆக மாற்றப்படும், இந்த வரி மாற்றம் கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்குப் பொருந்தாது.

159. மோட்டார் வாகனங்களை ஒட்டிய மேற்கூறிய வரி மாற்றங்கள் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமுல்படுத்தப்படும்.

160. வரும் 1990-91 ஆம் ஆண்டு இறுதி பற்றாக்குறை, நிதி நிலை அறிக்கையின் மதிப்பீடுகளின்படி ரூ. 510.10 கோடி



அளவுக்கு இருக்கும் என்று, இந்த உரையில் வேறு பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். அண்மையில் மது விலக்குக் கொள்கையில் அறிவிக்கப்பட்ட மாற்றங்களினால் ரூபாய் 180 கோடி அளவுக்கும், இந்த நிதி நிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப் பட்ட வரி மாற்றங்களினால் நிகரமாக ரூபாய் 62 கோடி அளவுக்கும், இந்தப் பற்றாக்குறை குறைக்கப்பட்டு, 1990-91 ஆம் ஆண்டு இறுதியில் நிகரமாக ரூபாய் 268.10 கோடியாக இருக்கும். நான் முன்னமேயே விளக்கியுள்ளபடி, இந்தப் பற்றாக்குறை பெருமளவுக்கு மத்திய அரசு விதிக்கும் வரி களிலிருந்து நமக்குச் சேரும் தொகைகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்தின் மூலமாகவும், திட்ட செலவுக்காக மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகைகளை உயர்த்தப்படுவதின் மூலமாகவும், வெளி மாநிலங்களுக்குச் சரக்குகள் அனுப்புவதின் மீதான வரியினால் கிடைக்கக்கூடிய தொகைகளினாலும் சரிக்கட்டப்பட வேண்டியதாக இருக்கிறது. மேலும், கூடுமான அளவுக்கு, இதனைச் சரிக்கட்ட நாம், செம்மையாக வரி வசூல் முறைகளையும் சிக்கனத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கைகளை மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்துவோம். அதே நேரத்தில் நாமும் பற்றாக் குறையை ஈடு செய்ய உரிய முறைகளை மேற்கொள்ளுவோம்.

161. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து எனும் அறிவுரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரு அரசுக்கும், அந்த அரசினால் பரிபாலிக்கப்படும் மக்களுக்கும் பொருந்தாது என்பதே என் கருத்து. ஏனெனில், இன்னும் எத்தனையோ திட்டங்கள், நலப் பணிகள் மக்களுக்குத் தேவைப்படு கின்றன. அதனை நிறைவேற்றத் துடிக்கும் நமக்கு நிதிநிலை போதுமானதாக இல்லாதபோது ''போதுமென்ற மன உபதேசம்'' ஆளுவோருக்கும் ஆளுவோரைத் தேர்ந்தெடுத்தோருக்கும் ஏற்புடையதாக இருக்க முடியாதல்லவா?

162. எனினும், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் கூறியது போலவே; செல்வம் சுருங்கிய காலத்தும் கடமையுணர்ந்தோர் நற்செயல்களை நிறைவேற்றத் தயங்க மாட்டார் எனும் வள்ளுவர் வாக்கினை மனத்தில் பதித்துக் கொண்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனும் உறுதிப்பாட்டுடன் இந்த அரசு செயல்படுமெனத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த அறிக்கையினைத் தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து உறுதுணையாக இருந்த நிதித் துறை செயலாளர் திரு. என். நாராயணன் அவர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் நன்றியினைக் கூறி, இந்த 1990-91ஆம் ஆண்டுக்கான நிதிநிலை திட்ட மதிப்பீடுகளை அவையினர் ஏற்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. முன்பண மானியக் கோரிக்கைகள், 1990-91 அளித்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டு செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்:

1990-91 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

கோரிக்கை:

A. வருவாய்க் கணக்கில் செலவு.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 1 | நிலவரித் துறை | 7,42,19 |
| 2 | மாநில ஆயத் தீர்வைத் துறை | 1,28,71 |
| 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம் | 1,28,99 |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம். | 7,39,68 |
| 5 | முத்திரைத் தாள்கள்—நிருவாகம் | 42,81 |
| 6 | பத்திரப் பதிவு | 3,33,59 |
| 7 | மாநிலச் சட்ட மன்றம்— | 55,92 |
| 8 | தேர்தல்கள்— | 38,32 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 14,90,45 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் | 86,52 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 21,82,08 |
| 12 | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். | 1,63,94 |
| 13 | நீதி நிருவாகம் | 6,92,03 |
| 14 | சிறைச் சாலைகள் | 4,07,04 |
| 15 | காவல் துறை | 53,64,24 |
| 16 | தீயணைப்புப் பணிகள் | 4,16,68 |
| 17 | கல்வி | 2,60,50,66 |
| 18 | மருத்துவம் | 54,91,50 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 30,82,06 |
| 20 | வேளாண்மை | 1,08,86,79 |
| 21 | மீனளம் | 2,51,11 |
| 22 | கால்நடை வளர்ப்பு | 171,4,58 |



ரூபாய் (ஆயிரத்தில்.)

கோரிக்கை:

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 23 | கூட்டுறவு | 7,97,14 |
| 24 | தொழில்கள் | 1,63,25 |
| 25 | சின்கோனா | 84,90 |
| 26 | கைத்தறியும் துணித் தொழிலும் | 10,97,11 |
| 27 | கதர்த் தொழில் | 1,77,24 |
| 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும். | 56,21,73 |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 8,52,27 |
| 30 | சமூக நலன் | 34,85,65 |
| 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 20,91,09 |
| 32 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் | 7,11,70 |
| 33 | வீட்டுவசதி | 3,52,73 |
| 34 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 28,39,58 |
| 35 | நுகர்பொருள் வழங்கல் | 94,83,37 |
| 36 | பாசனம் | 26,1?,26 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 91,39 |
| 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். | 9,57,37 |
| 39 | சாலைகளும் பாலங்களும் | 35,07,71 |
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 2,16,74 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 30,00 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 66,72,64 |
| 43 | பல்வகை | 32,40,67 |
| 44 | எழுதுபொருள்—அச்சுத்துறை | 5,69,44 |
| 45 | காட்டுவளத் துறை | 6,68,34 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 10,63,25 |
| 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 1,20,13 |
| 48 | வரகத் தொழில்கள் | 6,18,58 |
| 49 | குடிநீர் வழங்கல் | 34,50,71 |
| | மொத்தம்-A. வருவாய்க் கணக்கு.. | 11,15,28,48 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | |
|---|---|---|
| 50 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 73,90 |
| 51 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 5,55,87 |

கோரிக்கை B.

வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 52 பாசனம் குறித்த மூலதனச் செலவு | 14,39,22 |
| 53 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 9,86,95 |
| 54 சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | [illegible].27,91 |
| 55 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 12,[illegible]8 |
| 56 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 6,57,47 |
| 57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 17,[illegible]6 |
| 58 பல்வகை மூலதனச் செலவு | 5,05.08 |
| மொத்தம்- B. வருவாய்க் கணக்கில் வராத மூலதனச் செலவு. | 50, 76, 59 |
| C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பி செலுத்துதலும். | |
| 59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 1,00,47.13 |
| பெருமொத்தம் .. | 12,66,52,30 |

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. பேரவை மீண்டும் 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

1. தங்கத்தினால் செய்யப்பட்ட, சங்கிலியற்ற தாலியின் விற்பனைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 25-9-1989 ஆம் நாளிட்ட 724 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

2. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 28-6-1989 ஆம் நாளிட்ட 379 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட





அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

3. தமிழ்நாடு வேளாண் விற்பனை அங்காடிகள் சார்நிலைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விற்பனை அங்காடிகள் பணியாளர்களுக்கான சிறப்பு விதிகள் மற்றும் அங்காடிக் குழுக்களின் சில பதவிகளுக்கான தற்காலிக விதிகளை வகுப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 5-7-1989 ஆம் நாளிட்ட 470 முதல் 476 ஆம் எண்கள் வரையிலான அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் விற்பனை அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

4. நரிக்குறவர்களுக்கு மலிவு விலையில் விநியோகிப்பதற்காக ஜிப்சி மையத்தினரால் வாங்கப்படும் பல்வேறு வகைப்பட்ட மணிகள் மற்றும் இழைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1[illegible]-9-1989 ஆம் நாளிட்ட 692 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 2-7-1988 ஆம் நாளிட்ட 821 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

6. நெல், பருத்தி, நிலக்கடலை, மிளகாய் மற்றும் அனைத்து வடிவிலான கரும்பு, வெல்லம் ஆகியவற்றிற்கான அங்காடிப் பகுதியாக உத்தமபாளையம் அங்காடியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 29-7-1989 ஆம் நாளிட்ட 554 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

7. அடையாறு புற்றுநோய் மையத்தினரால் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1989 ஆம் ஆண்டு மே திங்கள் வரை விற்பனை செய்யப்பட்ட பரிசுச் சீட்டுகளின் விற்பனைக்காக செலுத்தக்கூடிய வரியினை ரத்து செய்வது குறித்து வணிக

வரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 16-10-1989 ஆம் நாளிட்ட 754 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு சட்டமன்ற பயணப்படி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 28-7-1989 ஆம் நாளிட்ட 1260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

9. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்களுக்கு சம்பளங்கள் வழங்கல் மற்றும் மருத்துவ செலவுகளை ஈடு செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 28-8-1989 ஆம் நாளிட்ட 1432 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

10. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (அரசு இல்லங்கள் அமைத்துக் கொடுத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் அறைக்கலன்கள் அளித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 28-8-1989 ஆம் நாளிட்ட 1433 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

11. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (தனியார் இல்லங்கள் அமைத்துக் கொடுத்தல் மற்றும் பராமரித்தல் அறைக்கலன்கள் அளித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 28-8-1989 ஆம் நாளிட்ட 1434 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை[. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

12. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (குத்தகைக்கு எடுக்கப்பட்ட தனியார்



இல்லங்களை பராமரித்தல் மற்றும் அறைக்கலன்கள் அளித்தல்)
விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின்
28-8-1989 ஆம் நாளிட்ட 1435 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு
சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951)
14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

13. டி. என். ஓ. 9362 எண் கொண்ட பொருள் போக்கு
வரத்து வாகனத்திற்கு செலுத்த வேண்டிய வரி பாக்கி மற்றும்
தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1)
துறையின் 16-10-1989 ஆம் நாளிட்ட 2182 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974
ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது.]

14. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்
படும் அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விலைக்கு வழங்குதல்)
விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்
தீர்வைத் துறையின் 10-10-1988 ஆம் நாளிட்ட 1711 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு
1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

15. நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி
மதுக்கடைகள் ஒவ்வொரு வருடமும் மூடப்பட வேண்டும்
என்பது குறித்து உள் (மதுவிலக்கு-ஆயத்தீர்வைத்) துறையின்
21-8-1989 ஆம் நாளிட்ட 944 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு
மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54
(3) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது.]

16. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்
செட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஆதிவாசிகளுக்காக கட்டப்படும்
இல்லங்களுக்காக ஊராட்சி ஒன்றிய மரவேலைப்பாடு மற்றும்
தச்சு மையங்களினால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும்
மரச் சாமான்களுக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து
வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7-12-1989
ஆம் நாளிட்ட 864 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது.]

17. கண்டசாரி சர்க்கரைக்காக வாங்கப்படும் கரும்புகளுக்கு
கொள்முதல் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்
மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-10-1989 ஆம்

1H3792

நாளிட்ட 776 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

18. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10-11-1989 ஆம் நாளிட்ட 814 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

1. வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 18-7-1981 ஆம் நாளிட்ட 581 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கான பிழை திருத்தம்.

2. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/1990).

3. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 2/1990.)

143792

D

V2I1,3I1N90

N90.21.1

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286/B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.